Registered No. M 878

83

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2. { 1911௵ ஜூலை௴ 15௳ / விரோதகிருது௵ ஆனி௴ 31௳ } பகுதி 3.

ப. நாராயண அய்யர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி அய்யர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2.      தனிப்பிரதி அணா 4.

மதுரை
விவேகபாநு அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| மகுடாபிஷேகம்—பத்திராதிபர். | ௭௭ |
| கல்விகற்பிக்கும் முறையின் சீர்திருத்தம்—ப. நா. | ௭௯ |
| எண்ணம்: அதன்பயன், நன்மை, தீமை—வி. வெங்குசாமி அய்யர் | ௮௮ |
| பிரஹ்மஞானசபையும் சகோதரபாவமும்—ப. நா. | ௯௯ |
| அதிகசமீபத்தில் வருங்காலவிசேஷம்—வி. இராமச்சந்திரநாயுடு | ௧௦௫ |
| புத்தகவரவு—பத்திராதிபர் | ௧௧௭ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௧௧௮ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | |



**The**

# Oriental Prognostic Observatory.

Corresponding Director: **V. V. Ramanan.**

F. Z. S. (LOND.) O.M.D.S.F.V. (BERLIN).

M.O.S.M.F. (PARIS): ETC.

Charges very moderate for the work turned out !

We do not for a moment deny that there are plenty of impostors who in the name of astrology are making false predictions and thus bringing a noble science into ill-deserved contempt. But our predictions are guaranteed and based on the most reliable canons of all the systems Asiatic and European. Struck by our abilities in interpreting planetary influence, that NESTOR of "MODERN ASTROLOGY" in the West, Mr. ALAN-LEO writes to us

"Just give us the cream of your system and MAKE YOUR NAME FAMOUS IN THE WEST."

Apply with birth-date, and an initial fee of Rs. 6 stating requirements to the undersigned:—

1, SAMI PILLAI ST., Chulai, Madras, N.C.

**V. V. Ramanan,**
Corresponding Director.

85.

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. } 1911ஸு ஜூலைமீ 15உ / விரோதகிருதுஸு ஆனிமீ 31உ { பகுதி 3.

## மகுடாபிஷேகம்.

"அன்பின் வழியது என் அரசாக்ஷி முறை."

---

கலியப்தம் 5013-ம் ஆண்டு விரோதகிருதுஸு மிதுனமீ 8உக்குச் சரியான கி. பி. 1911ஸு ஜூன்மீ 22உ குருவாரம் தசமி திதியும், அசுவதி நக்ஷத்திரமும், அமிருதயோகமும் கூடிய சுபதினத்தில், ஸூரிய அஸ்தமனமே இல்லாதபடி உலகமெங்கும் வியாபித்ததும், இப்பூமியில் கால் பாகமாயுள்ளதும், பூமியின் கண்ணுள்ள குடிஜனத்தில் 6-ல் ஒரு பகுதி தங்கியிருக்கின்றதும், அஷ்டைசுவரியங்கள் பொருந்தியதும், உயர்வற உயர்நலமமைந்துள்ளதுமான ராஜ்ஜியத்தையும் அதின் சகல சம்பத்தையும் பெறுதலின் அறிகுறியாக, லண்டன் மாநகரில் வெஸ்டு மினிஸ்டர் ஆபி என்ற புராதன திவ்விய ஆலயத்தின்கண், பல ஜன சமூகங்களின் முன்னர், பலதேசத்து முடிமன்னர்களும், நம் இந்தியா தேசத்தின்கண்ணுள்ள பல ராஜாக்

களும், அவர்கள் பிரதிநிதிகளும், மற்றும் பல பிரபுக்களும், பெரியார் சிறியார், ஆண் பெண் பாலர்கள் பல ஜாதியார், பல மதஸ்தர்களான கோடாநுகோடி ஜனங்களும் சூழ்ந்திருக்க, வெகு விமரிசையாய் சகல வைபவங்களுடனும், ஐந்தாம் ஜார்ஜ் மகாராஜாவும், மகாராணி மேரி அம்மையாரும் பட்டாபிஷேகம் செய்யப்பெற்றார்கள்.

யாதொரு விக்னமுமின்றி இறைவனருளால் எல்லா வைபவங்களும், கண் காக்ஷிகளும், உத்ஸவாதிகளும், நேர்மையாகவும், ஒழுங்காகவும், மங்களகரமாகவும் நடைபெற்றன. மாக்ஷிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியாரும், மகாராணி மேரி அம்மையாரும் தீர்க்காயுஸ் உள்ளவர்களாயும், ஷை யாருடைய செங்கோன் முறை நன்மை பற்றியதாகவும், நீதிமுறை வழுவாமல் நடைபெறும்படியாகவும், அருள்வள்ளலாகிய பரமேசுவரன் அநுக்கிரஹம் செய்வாராக. இந்த கம்பீரமான ராஜ்ஜியத்திற்கு எல்லா மங்களங்களும் உண்டாவதாக! எல்லா ஜனங்களும் சுகிர்தம் பெறுவார்களாக!!

அன்புடை மன்னர் ஐந்தாம் ஜார்ஜும்
இன்துணை ராணியர் எழிலுறு மேரியும்
மன்னுயிர் ஓம்பி மகிழ்வுற வாழி,
மலைவளம் நதிவளம் மாநில வளமுடன்
கலைக ளெல்லாம் தலைமைபெற் றோங்கும்
இந்திய இங்கிலாந்து இன்புற வாழி,
ஆங்கிலச் செங்கோல் அழகுற வாழி,
வாழி அறவோர், வாழி அறிஞர்,
வாழி நலமெலாம் வளமுற வாழியே.

ஓம் தத் ஸத்.

பத்திராதிபர்.

# கல்வி கற்பிக்கும் முறையின்

## சீர்திருத்தம்.*

---

1. உலகத்தில் இப்போது, குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் நடத்தப்பெறும் கல்விப் பயிற்சி முறையானது அடியில் வரும்சித்தாந்தத்தின் ஆதாரத்தைப்பற்றிநிகழ்கின்றது. குழந்தையானது முன்ஜன்மங்கள் பெற்றிருந்ததாய், கவனங்கொள்வதேயில்லை. அது நூதன சிருஷ்டி. பெற்றோர்களால் ஏற்பட்ட சரீரம் என்ற குடிசிலில், வந்து குடியேறி இருக்கிறான். அவன் குடிபுகுங்காலத்தில், யாதொன்றும் கொண்டுவரவில்லை. அவன் மனம், முன் ஒரு விதமான ஸம்ஸ்காரங்கள், முன்னினைப்புக்கள் முதலியவையில்லாமல் சுத்தமாய் வெறுமையாக இருந்தது. சிலர் அபிப்பிராயத்தில், பெற்றோர்களின் சரீர சம்பந்தத்தால், அவர்களுடையவும், அவர்களின் முன்னவர்களுடையவும், சில ஸ்தூலசரீரப்பாங்கினால் ஸம்ஸ்காரங்களான குணங்கள், அதாவது பிரிய அப்பிரிய எண்ணங்கள் இவைபோன்றவைகள் அமைந்தவைகளுடன் பிறக்கிறான்என்பர். மற்றும் சிலர் அபிப்பிராயத்தில், ஒன்றுமே இல்லை. எல்லாம் அவன் அவன், பிறக்கும் இடத்தையும், அதனால் ஏற்படும் சுற்றத்தையும், அது சம்பந்தமான, சௌகரியத்தையும் பொறுத்ததாக இருக்கிறது என்பார். சிசுவானது, ஒரு ஜீவன் என்றும், முன் எத்தனையோ ஜன்மங்களை எடுத்து அனுபவங்கள் பெற்றான் என்றும், திரும்பவும் உலகத்தில் வந்து பிறந்திருக்கிறான் என்றும், அச்சிசு ஈசுவரஅம்சம் என்றும், ஒருவரும் கொஞ்சமேனும் நினைத்தாரில்லை. இத்தன்மையான சித்தாந்தத்தை முன்னிட்டு கல்விப்பயிற்சி முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால்தான் எல்லா வாலிபர்களுக்கும் ஒரேதரத்துப் படிப்பு, ஒரேவிதப்பயிற்சி, ஒரேவிதமான புத்தகங்கள், ஒரேவிதமான பாடம், நிகழ்கின்றன. கருக்கட்டி வார்க்கப்படும் பிரதிமைகள்போல், குழந்தைகளைப் பாவித்து, இக்காலத்திய கல்விகற்பிக்கும் முறைகளை நடத்துகின்றார்கள்.

---

* (Adaptation of Mrs. Annie Besant's article in the 'Theosophist' of July 1910.)

2. சற்று கவனம் செலுத்தி விசாரிக்குமளவில், ஒவ்வொரு சிசுவும் ஓர் ஓர் ஜீவன். ஈசுவர அம்சம் பொருந்தியவன். பூர்வஜன்மங்களில் தான் தான் அனுபவித்தவைகளும் அறிந்தவைகளும், வாசனைமயமான நுண்ணிய ஸம்ஸ்காரங்களாக, அவனுடைய மனோமய, விஞ்ஞானமய, ஆநந்தமய கோசங்களின்கண், அமைந்திருக்கின்றன. அவன் அவன் பூர்வஜன்மங்களில் செய்த கர்மங்களுக்குத்தக்கவாறு, உலகத்தில் சிலமும் குணமும் பெறுகிறான். பல சௌகரியங்கள், அல்லது கஷ்டங்கள் உள்ள, நிலைமையை அடைகிறான். ஆகவே எல்லாருக்கும் ஒரேதரமான படிப்பு ஏற்படுத்தல் அறிவீனமே. ஆனால், அந்தந்தக் குழந்தையை நன்றாய்க் கவனித்துப் பார்த்து, அததன் குணநிசயங்களையும், மனப்போக்குகளையும், சுதிகளையும் நன்றாய் ஆராயவேண்டும். அதன்மேல், அக்குணங்களின் அபிவிருத்திக்கு ஏற்ப, படிப்பினைகளை அமைத்தல் வேண்டும். சரீரத்தால் குழந்தையாக ஒருவன் இருக்கலாம். சரீரம் பலத்தை அடையவேண்டுவதுதான், சரீரம் வளரவேண்டுவதுதான்; ஆனால் அச்சரீரத்தை உடைய சரீரியான ஜீவாத்மா வெகு ஜன்மங்களில் பிறந்து இறந்துவந்த அனுபவியான மஹாபுருஷனாக இருக்கலாம். அறிஞனாக இருக்கலாம். மஹா ஞானிகளையும் மஹா கல்விமான்களையும் பார்க்கிறோம். ஞான சம்பந்தர் தாய்ப்பால் மறவாத வயதில் அற்புதமான பாசுரங்கள் கவனம் செய்தார். ஔவை, திருவள்ளுவர் முதலாயினோர், பிறந்த நிமிஷமே, கவிகள் பாடியதாகக் கர்ணபரம்பரையாக் கேள்வியுற்றிருக்கிறோம். சிலர் கானத்தில் அதிபாலியத்தில் மஹாநிபுணராக இருக்கிறார்கள். சமீபத்தில், அமெரிக்காவில் ஒரு சிறுவன் 4th dimension என்ற கநாம்சத்தைப்பற்றி, பெரிய பெரிய கணிதசாஸ்திரிகள்கூட பிரமிக்கும்படியாக யாதொரு தடையின்றித்தெளிவாய் உபந்நியாசம் செய்தானும். இன்னும் இதைப் போன்ற எத்தனையோ அற்புதமான மனோசக்திகளும் அதிக பால்லியத்தில், குழைந்தைகளிடம் குழந்தைப்பிராயத்திலேயே, விளங்குகின்றமையைக் காண்கிறோம். இது நிற்க.

3. நூதன விஷயங்களைக் கற்றுக்கொள்வதில், அதிக பரபரப்பும் ஆசையும் உள்ளவைகளாக அனேக குழந்தைகள் இருக்கின்றன. இது என்ன, அது என்ன, என்று நம குழந்தைகள் நம்மை

நச்சுதல் செய்கின்றன. இதைத் துன்பமாக எண்ணுகின்றோம். நீ பேசாமல இரு, அதனால் உனக்கு ஆகவேண்டியது என்ன. என்னை உபத்திரவப்படுத்தாதே என்கிறோம். பெரும்பாலும் அக் கேள்விகளுக்கு நமக்கே சரியானபடி விடைசெய்ய சாமர்த்தியம் இல்லாமல் இருக்கின்றோம். அதைப் பேசாமல் இருக்கும்படி பயமுறுத்துகின்றோம். இதினால் அக்குழந்தைக்குக் கேடு உண்டாகும். தைரியம், பலம், மெய் பேசுதல் முதலிய இத்தன்மையான நல்ல சீலம் அமையாமற்போம். குழந்தையின் குணங்களையும் அதன் சேஷ்டைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் பெற்றோர் நன்றாய்க் கவனிக்கவேண்டும். அவைகளினின்று இத்தன்மையான படிப்பு இக்குழந்தைகட்குக் கற்றுக்கொடுத்தால் நலம் என்று அறியவரும். தவிரவும் அறிவுள்ள ஜோதிஷ சாஸ்திரியைக்கொண்டு, குழந்தையின் ஜாதகத்தைப் பார்த்து, கிரகங்களின் நிலைகளை அறிந்து அவைகளுக்குத் தக்கபடி, குழந்தையின் கல்விப்பயிற்சியைச்செம்மைப்படுத்தல் வேண்டும். வாக்கின் ஸ்தானத்தில் கெட்ட கிரகங்கள் இருந்தால், அவனுக்குப் பொய்சொல்லும்சுபாவம் இயற்கையாகத் தோன்றும். அதற்குத்தக்கபடி, பொய் பேசும் தன்மை அதிகப்படாமல், பொய்யின் கெடுதியையும், மெய் பேசும்படி உத்ஸாகத்தையும், அக்குழந்தைக்கு உண்டுபண்ணவேண்டும். சில நற்குணங்கள், கருவாகஇருக்கும். அவைகளை, தக்க படிப்பாலும், அதன் முன் நாம் செய்யும் அனுஷ்டானத்தாலும், பின்னும் ஸத்ஸங்கத்தாலும் விருத்திசெய்து, மலரும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

4. குடும்பத்தில்படிப்பானது, மதவிஷயத்தைப்பற்றியும், நீதிமுறையைப்பற்றியும் சிறு கதைகள் மூலமாகவும், சிறு படங்கள்மூலமாகவும் அறிவை விருத்தி செய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். ஜன்மாந்தரத்தைப்பற்றியும், மனிதன் மூன்று லோகத்திலும் வரத்துப்போக்குள்ளவன், அதினால் அவன் திரிலோகி என்பதைப் பற்றியும், மறுஜன்மம் உண்டென்பதையும், கர்மகதியைப்பற்றியும், நன்மைவிதைத்தால் நன்மைவிளையும், தீமை விதைத்தால் தீமைவிளையும் என்ற உயர்நலமுள்ள விதியைப்பற்றியும், பலதிருஷ்டாந்தங்கள் மூலமாகக் குழந்தை மனத்தில் பதியவைக்கவேண்டும். பிராணன்

ஒன்றே என்றும், எங்கும் பரவியிருக்கிறதென்றும், எல்லா ஜீவ ராசிகளிலும் கடவுள் இருக்கின்றார் என்றும், அதனால் ஜீவராசி களுக்கு ஹிம்சை செய்யக்கூடாதென்றும், ஜீவகாருண்யம் வைத்தல்வேண்டுமென்றும், இளம்பிராயத்திலேயே இத்தகைய நற் புத்திகளைக் கற்பித்தல்வேண்டும். குழந்தையின் உணவு விஷயத்தில் அதிகக் கவலை வைக்கவேண்டும். குழந்தைகள் கண்டபடி கண்ட ஆ காரங்களை உட்கொள்ளாமல் தவிர்க்கவேண்டும். குறிப்பிட்ட காலங்க ளில் ஆகாரங்களைக் கொடுக்கவேண்டும். ஆகாரங்கள் சத்துவகுணம் பயக்குமவைகளாக இருத்தல் வேண்டும். பால், கோதுமை, பக்ஷ ணங்கள் சொற்பமாகவும், லகுவாகவும் சீக்கிரமாகஜ ஜீர்ணமாகக் கூடியவையாகவும், உணவு இருத்தல் வேண்டும்.

5. முதல் 7வயதுவரை, குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் அவரவர் வீட்டிலேயே நற்குணம், நற்சீலம் உண்டா கும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும். பொதுவான மதவிஷ யங்களை இக்காலத்தில் கற்றுக்கொடுக்கவேண்டும். ஈசுவரன் ஒருவ ரிருக்கிறாரென்றும்,அவர் உலகத்தைச் சிருஷ்டித்தாரென்றும், நடத் துகிறாரென்றும்,சிறுசிறு திருஷ்டாந்தங்கள் மூலமாகப் படிப்பித்தல் வேண்டும். செடிகொடிகள் எப்படி வித்திலிருந்து வெளியாகி,சீத உஷ்ண சம்பந்தத்தினால் பூமியிலிருக்கும் திரவியங்களைச் சுவீகரித்து, தன்மயப்படுத்தி,இலை, பூ, காய்கனிகளையுடையதாய் எப்படி அபிவிரு த்தியடைகின்றன வென்பதை நேராகச் செடிகொடிகளைக் காட்டிக் கற்பித்துவரவேண்டும். இன்ன புஷ்பம் இன்ன தேவதைக்கு உரிய து,இன்ன பழம் இன்ன தேவதைக்குப் பிரியமானது என்பவைகளைக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவைகள் சம்பந்தமான சிறு கதைகளை யும், புத்திமதிகளையும் சொல்லித்தரவேண்டும். காரண காரிய பரம் பரா முறைகள் எப்படி உலகத்தில் நிகழ்கின்றனவென்பதைச் சிறு, சிறு திருஷ்டாந்தங்கள் மூலமாய்க் குழந்தை மனத்தில் பதிப்பிக்க வேண்டும். உதாரணமாக,குழந்தையின் அனுபவத்திலுள்ள நெய்யை க்காட்டி,நெய் வெண்ணெயைக்காய்ச்சினதினாலும், வெண்ணெய்பாலைக் கடைந்ததினால் பாலினின்றும், பால் பசுமாட்டின் மடியினின்று கரந் ததினாலும், அப் பால், பருத்திவிதை புல் முதலான தீனி பசுவுக்குக்

கொடுப்பதினால் காக்கிறதென்றும், புல் மழை பெய்வதினால் உண்டாகிறதென்றும், மழை சமுத்திரம் முதலான நீர்ப்பரப்பிலுள்ள ஜலமானது சூரிய வெப்பத்தினால் ஆவியாக உண்டாகி மேல்கிளம்பி மேகங்களாகத்திரண்டு அம்மேகங்களினின்று மழைபெய்கிறதென்றும், இவைபோன்ற மாதிரியாகக் கற்பித்தலினால் புத்தி விசாலமாகும். பக்ஷிகள், பூச்சிகள், மிருகங்கள், இவைகளின் உபயோகங்களைப்பற்றியும், உற்பத்தி முறைகளைப்பற்றியும், அவைகளின் அற்புதங்களைப்பற்றியும் சாதாரணமாக சம்பாஷணை மூலமாக அறிவுறுத்தல் வேண்டும்.

6. இவ்விளமைப்பருவ காலத்தில், குழந்தை கையில் அழகானதும், நன்றுப்பணி தீர்க்கதுமான விக்கிரகங்கள், பொம்மைகள் முதலானவைகளைக் கொடுத்துப் பழக்கக்கூடாது. அப்படிச் செய்தால் குழந்தையின்கற்பனை சக்தி (Imaginative faculty) விருத்தியாகாது அதனால் பணிதீராத சாதாரண உண்டை உருவியான கல், கட்டை முதலானவைகளைப் பல சொரூபங்களாகக் கற்பித்துக் கொள்ளும்படி, குழந்தைகளுக்கு அறிவிப்போமானால், கற்பனைசக்தி விருத்தியாகும். 3 வயது, 4 வயதுள்ள குழந்தைகள், முக்கியமாய்ப் பெண்குழந்தைகள் சொரூபமில்லாத கட்டைகளை வைத்துக்கொண்டு அதை பாப்பா என்றும் சிறுகந்தைகளை அதற்கு உடுத்தி அதைத் தம்குழந்தையாகப் பாவிக்கிறதையும் நாம் சாதாரணமாய்க் காண்கின்றோம். இக்காலத்தில் புஸ்தகத்தைச் சுத்தமாய்த் தவிர்க்கவேண்டும். எழுத்து முதலானவைகள் கற்றுக்கொடுத்தலில், நாமே அப்போதைக்கப்போது, மணலிலாவது, சிலேட்டிலாவது, சுவரிலாவது, பலகையிலாவது, காகிதத்திலாவது, எழுதிக்காட்டவேண்டும்.

7. எந்த விஷயங்களைக் கற்றுக்கொடுத்தாலும், அது வார்த்தைமயமாகமாத்திரமல்லாமல், வஸ்துக்களை முதன்மையிலாவது கடையிலாவது நேருக்கு நேராகக் காட்டவேண்டும். சிறு நீதிவாக்கியங்களையும் நன்மொழிகளையும் லேசலேசாய் மனனம் பண்ணும்படியாகக் கற்பித்தல் நலம். நீதிகள் அடங்கிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் வெற்றிவேற்கை, இப்புஸ்தகங்களின் நீதிவாக்கியங்களை வாய்ப்பாடமாகக் கற்பித்தல் பிரயோஜனமாகும். இராமாயணம், பாரதம், பாகவதம், சைவவைஷ்ணவ புராணங்கள் இவைகளிலுள்ள கதை

களையும்,முக்கியமாய் ரிஷிகள், வீரர்கள், போர்வீரர்கள், சூரியசந்திர வம்சத்து இராஜாக்கள், உயர்ந்த ஸ்திரீரத்தினங்கள், ஆழ்வார்கள் நாயன்மார்கள், நூதனமான விஷயத்தைக் கண்டுபிடித்த புத்திமான்கள், கவிஞர்கள், முதலானவர்களைப்பற்றிய சரிதங்களையும், சிறுகதைகள் ரூபமாகச் சொல்லவேண்டும். குழந்தைகள் கதைகேட்பதில் மிகவும் பிரியமுள்ளவர்கள். எல்லாப் படிப்பிலும் ஊடேஊடே விளையாட்டுக்களும் வேடிக்கைகளுமிருத்தல் வேண்டும். அதிகமாய் விளையாடும்படியாகச் செய்யவேண்டும். எல்லாப்படிப்பும் விளையாட்டாகவே நிகழவேண்டும்.

8. குழந்தையினுணவு, தேகபலத்தையும், புஷ்டியையும் கொடுக்கக்கூடியதா யிருக்கவேண்டும். குருத்துவமான சாப்பாட்டைத் தவிர்க்கவேண்டும். பால், பழம், சர்க்கரை, வித்துக்கள் இவை போன்ற நல்ல பதார்த்தங்கள் உணவாக ஏற்படவேண்டும். மாமிசம், மீன், துர்வாசனையுள்ள ஈரவெங்காயம், வெள்ளைவெங்காயம் முதலானவைகளை விலக்கவேண்டும்.

9. 7 முதல், 14 வயது வரையில், படிப்பு நடைபெறவேண்டிய முறை. இக்காலத்தில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாம். எழுத்துக்களையும், சித்திரப்படங்கள் மூலமாகப் படிப்பிக்கவேண்டும். குழந்தைகளைச் சிறு கதைகள் சொல்லும்படி செய்யவேண்டும். குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தவுடனே உபாத்தியாயர் ஒவ்வொரு குழந்தையையும் கூப்பிட்டு அததன் வீட்டில் நடந்த சுபசோபனங்கள் முதலியவைகளை அதினுடைய வாயால் சொல்லும்படி பழக்கவேண்டும். உபாத்தியாயர் குழந்தையின் கல்விப் பயிற்சி விஷயத்தில் அவசரப்படக்கூடாது, பொறுமை பாராட்டவேண்டும். சொன்ன விஷயத்தைக் குழந்தை கிரகிக்காமற்போனால், குழந்தையின் மேல் கோபிக்காமலும், நிந்தனை மொழிகளைச் சொல்லாமலும், பொறுமை பாராட்டவேண்டும். குழந்தை கிரகிக்காமலிருந்தால், அதற்குக் காரணம், உபாத்தியாயர் தான் படிப்பிக்கும் முறையில் தப்பிதமுள்ளதென்றறியவேண்டும். அந்தந்தக் குழந்தையின் திறமைக்கேற்ப, படிப்பைநடத்தவேண்டும். குழந்தையோ ஆயிரங்காலத்துப் பயிர். அதின் மூளையானது, சாமான்களைப்போட்டு

அடைத்துவைக்கும் குதிர் என நினையாமல், ஒரு சிறு ஆலவித்தினின்று, ஆலவிருட்சம் பூமியின்கண்ணுள்ள ஸ்தூல திரவியங்களையும், ஆகாசத்திலுள்ள ஆவிகளையும் கொஞ்சம் கொஞ்சமாக உட்கொண்டு, தன்மயப்படுத்தி, எப்படி வளர்கின்றதோ, அம்மாதிரியாகக் குழந்தையின் மனோமய கோசமும், விக்ஞானமய கோசமும், முன் மாதிரியை ஒத்ததாக கல்வி கேள்விகளினாலே மேன்மேலும் அபிவிருத்தியடையவேண்டும் என எண்ணுக. குழந்தை ஏதேனும் ஒரு பிசகு செய்தால், அதினால் கோபம் கொள்ளாமலும், பயமுறுத்தாமலும், அப்பிசகுக்குத் தண்டனை செய்யாமலும், குழந்தையைக் கூப்பிட்டு அது செய்த குற்றத்தை விவரமாகத் தெரிவித்து, அக்குற்றத்தினால் வரும் கெடுதிகளை நன்றாய் எடுத்துக்காட்டி அதன் மனத்தில் பதிப்பித்து, இனி அக்குற்றம் செய்யக்கூடாதென்றும் அறிவுறுத்தல் வேண்டும்.

10. சிறிய பிரதிமைகள், பொம்மைகள், பலவித உருவங்கள், களிமண்ணினாலும், மாவாலும், வாழைத்தண்டாலும் இன்னும் மற்று மணல்முதலானவைகளாலும் குழந்தைகளைத் தாமேசெய்யும்படியாகப் பழக்குதல் நலம். ஈசுவரன் சம்பந்தமான ஸ்தோத்திரங்கள், பாடங்கள் முதலானவைகளைத் தமிழிலும் ஸம்ஸ்கிருதத்திலும் கற்றுக்கொடுத்து ஸ்வரப்பிசகில்லாமல் பாடும்படியாகப் பழக்குதல் வேண்டும். முக்கியமாய், பஜகோவிந்தம், மூஷிகவாகனம், ஸரஸ்வதீ ஸ்தோத்திரம், சிவ ஸ்தோத்திரம், விஷ்ணு ஸ்தோத்திரம், மஹிம்ந ஸ்தோத்திரம் இவைகளையும், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழிபாடல்களையும் பண்முறையாகக் குழந்தைகள் பாடும்படியாகப் பழக்குதல் வேண்டும். இளமையில், மனனம் பண்ணும் சத்தியானது நன்றாய் விளங்குகின்றமையால், அவர்களுடைய மதத்திற்குரிய, உயர்ந்த வசனங்கள், பாசுரங்கள், இவ்வகைகளை மனனம் செய்யும்படி நடத்தவேண்டும். பிராமணக் குழந்தைகளை முக்கியமாய் வேதாத்தியயனம் பூர்ணமாகச் செய்யாமற் போனாலும் சில முக்கியமான பாகங்களையாவது அத்தியயனம் பண்ணும்படி செய்யவேண்டும். ருத்திரம், சமகம், புருஷ ஸூக்தம், உபநிஷத்துக்கள், ஆருணம் இவைகளை பிராமணப் பையன்கள் கட்டாயமாகப் படிக்கவேண்டும். பகவத்கீதையை எல்லா ஜாதியாரும் கற்கலாம்.

அதை உருப்போடவேண்டிய சமயமிதுவே. இக்காலத்தில் நம் தேசத்தில் ஒவ்வொருவரும் மூன்று பாஷைகள் கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமாகவிருக்கிறது. உலகவிஷயத்திற்காக தேச பாஷையும், ஆங்கில பாஷையும், ஞானவிஷயத்திற்காகவும், முன்னோர்களின் மஹிமை தெரிந்துகொள்வதற்காகவும் ஸம்ஸ்கிருத பாஷையையும் கற்கவேண்டும். இந்த ஏழு வயது முதல் பதினறு வயதுக்குள் பொதுவான விஷயங்களைப்பற்றிய பொதுவான கல்விப் பயிற்சி ஏற்படவேண்டும். இதன் அஸ்திவாரத்தின்மேல்தான் உயர்ந்த சிறப்பான (special) கல்விப்பயிற்சியின் மேற்கட்டிடம் கட்ட இயல்வதாகும்.

11. முதல் 7வயது வரையில் வியாதியில்லாத நல்ல ஸ்தூல தேகக்கட்டு உண்டாகவும், நல்ல வழக்கங்கள் ஏற்படவும், மதவிஷயங்களிலும் நீதி முறையிலும் மேலான எண்ணங்கள் மனத்தில் பதியவும், சரியானபடி முயற்சிக்கவேண்டும். இக்காலத்தில் கிரஹிப சக்தி அதிகமாயிருக்கின்றது. தவிரவும் மனத்தில் ஏதாவது ஒரு விஷயம் பதிந்தால் அது மாருமலும் ஸ்திரமாயுமிருக்கும். 2-ம் 7வருஷங்களில் அதாவது 7 முதல் 14 வயது வரையில், ஸ்தூல தேகப்பயிற்சியும், மனப்பயிற்சியும் உலக விஷயங்களில் பொதுவான ஞானமும் ஏற்படவேண்டும். இதுவே இனிவரும் மேலான படிப்புக்கு ஆதாரமாக ஏற்படும். 14 வயதுக்குமேல் யாதேனும் ஒரு விஷயத்தைப்பற்றிய சிறப்பான கல்விப்பயிற்சி உண்டாகவேண்டும் பொதுக்கல்விப்பயிற்சி என்ருல் பலவிஷயங்களை அறிந்து கொள்ளுதல், அகன்ற அறிவு இதனுல் ஏற்படும். சிறப்புக் கல்விப்பயிற்சி என்ருல் ஒரு விஷயத்தைப்பற்றிய பூர்ணஞானம் அதாவது ஆழ்ந்த அறிவு இதனுல் ஏற்படும். 14 வயது வருங்காலத்தில் பெற்ருேர்களும் உபாத்தியாயரும் பையனுடைய புத்தியின் திறமையையும், எம்முறைப்படிப்பில் பையனுக்கு ருசி இருக்கிறதென்றும், அவனுடன் சம்பாஷிப்பதினுலும், அவனுடைய மற்ற நடபடிக்கையினுலும், அறியக்கூடும், அறியவேண்டும். மேலும் அவன் உலகத்தில் எந்த உத்தியோகம் வகிக்கக்கூடியவனென்றும், அந்தத் தொழிலுக்கு ஏற்ப கல்வி கற்றுக்கொடுக்கத் தம்மாலியலுமாவென்றும், நன்கு ஆராய்ச்சி செய்து தெளிந்து, அதன்மேல் இனி அத்தன்மையான படிப்பை அவன் அப்பியசிக்கும்படி செய்யவேண்டியது.

12. அச்சிறப்புக் கல்விப்பயிற்சி விஷயமாக, இப்போது நம் தேசத்தில், பல துறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் யாதேனும் ஒரு துறையைச் சார்ந்து, அதன் படிப்பு முறைகளையும், பழக்கங்களையும் நன்றாயும் தீர்க்கமாயும் தம்மிடத்து அமையப் பெறும்படி நம்முடைய வாலிபர்கள் பயில வேண்டும். அவையாவன:—சாஸ்திரப்பயிற்சிக்குள்ள|உயர்தரப்படிப்பு (Arts College), வைத்தியசாலை (Medical) ஆங்கில வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம்: சிற்பசாஸ்திரங்கள்(Engineering College):ரஸாயநம்(Chemical Study, Tatta's Institute at Banglore): உபாத்தியாயர் தொழில்(Teaching College), : விவஸாயத் தொழில்(Agricultural College):மின்சாரசக்தியை உபயோகிக்கும்முறை(Electrical Engineering College): சித்திரம் எழுதல், பிரதிமைகள் அமைத்தல் (School of Arts): காடுகளை நேர்மையாக வளர்த்தல் (Forestry College ;ஸம்ஸ்கிருதசாஸ்திரங்களைப் படித்தல்(SanskritColleges) தமிழ்ப்பாஷையில் உயர்ந்த படிப்பு(செந்தமிழ்க் கலாசாலை,மதுரை): சிறுவேலைகிளைத் தொழில்களைக் கற்றல் (Technical classes for shorthand, type-writing, book-keeping, etc.): வியாபார விஷயங்களைக் கற்றுக்கொள்ளுதல் (School of Commerce): வேத அத்தியயநம் (Vedic Colleges): இவைகளைக் கற்பிக்கும் பல கல்விச்சாலைகள் பல இடங்களில் நம் தேசத்தில் இருக்கின்றன. இவைகளில் கற்றுத் தேர்ச்சி அடைகிற வித்தியார்த்திகள் தக்க வித்துவான்கள் மூலமாய்ப் பரீக்ஷை செய்யப்படுகின்றார்கள். சர்க்கார் மூலமாயும், சிற்சில சபைகள் மூலமாயும், இப்பரீக்ஷைகள் நடத்தப்பெறுகின்றன. இப்பரீக்ஷைகளில் தேருகிறவர்கள் யோக்கியதா பத்திரமும், வித்வத் பட்டங்களும் பெறுகிறார்கள். இதன்கண் விவரித்திருக்கிற முறையை நம்மவர்கள் அனுஷ்டிக்க முயலுவார்களேயாகில், நாளடைவில் நம் தேசத்தில் நடைறப்படித்துத் தேர்ந்தவர்கள் அநேகர் உண்டாவார்கள். அத்தகைமையர் ஏற்படவே, ஜனசமூகத்தில் கல்வியும் அறிவும் விருத்தியாகும். அதனால் நம் தேசம் நலம் பெறும். எல்லாம் வல்ல இறைவன் இத்தன்மையான நிலைமையை நம் தேசம் அடையும்படி அருள் புரிவாராக. ஓம் தத் ஸத்.

# * எண்ணம்: அதன் பயன், நன்மை, தீமை.

1876-ம் வருஷத்தில் அமெரிக்கா தேசத்திலுள்ள "தாமஸ் எடிசன்" என்பவர் போனகிராப் யந்திரத்தைக் கண்டுபிடித்தார். அது இப்போது எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த யந்திரம். அதன் மூலமாய் நாம் அநேக சங்கீத வித்துவான்களுடைய பாட்டுக்களையும், பலருடைய உபந்நியாசங்களையும் கேட்கிறோம். இந்த யந்திரத்தின் தத்துவம் யாதெனில்: ஒவ்வொரு சப்தமும் ஆகாசத்தில் அலைகளை உண்டுபண்ணுகிறது, அவ்வலைகள் உருவத்தை உண்டுபண்ணுகின்றன. சமீபத்தில் மெழுகு அல்லது வேறே மிருதுவான வஸ்துவினால் அமையப்பெற்ற ஒரு சாமானை வைப்போமாகில், அதில்அவ்வலைகள் உருவத்தை உண்டாக்கும். இதையறிந்து 'எடிசன்' என்பவர், சப்தங்களின் அலைகளை கிரகிக்கவும், மறுபடி முன்போல அலைகளை உண்டுபண்ணவும், மேற்சொன்ன யந்திரத்தைக் கண்டுபிடித்தார். இந்த யந்திரத்தின் மூலமாய் சப்தமானது ஒரு உருவத்தையுண்டாக்கவும், அதை ரக்ஷிக்கவும் கூடுமென்று வெளிப்படுத்துகிறது. அப்படியே சப்தமானது ஒரு உருவத்தை யழிக்கவும் கூடும். (Professor Tyndall) டிண்டல் என்ற வித்துவான் சப்தத்தின் அழிக்கும் சக்தியைப் பற்றி அநேக பரீக்ஷைகள் செய்து அதன் உண்மையைக் காண்பித்திருக்கிறார். அவர் ஒரு கண்ணாடிப்பாத்திரத்தையெடுத்து அதில் பாதிவரை தண்ணீர் நிரப்பி ஒரு வாத்தியத்தைத் தன் கையிலெடுத்துக்கொண்டு ஒருவித கானம் உண்டுபண்ணினார். அந்த கானத்துக்கு நேர்மையாய்க் கண்ணாடிப்பாத்திரத்திலிருந்து ஒரு நாதம் பிரதித்வனித்தது, எதிரொலி உண்டாயிற்று. அதே நாதத்தை அவர் தன் வாத்தியத்தில் பலதடவை உண்டாக்கினார், பாத்திரத்திலும் அப்படியே பிரதித்வனி உண்டாயிற்று. அவர் மகாவேகமாய் அதே நாதங்களை வாத்தியத்திலுண்டாக்கவே, அவ்வளவு வேகமாய்ப் பாத்திரத்திலிருந்தும் நாதங்கள் புறப்படவும், பின்பு அந்த நாதங்களால் உண்டாக்கப்பெற்ற சுவர அலைகளை கிரகிக்கவும் பின்பு வெளியிடவும் போதுமானபடி அந்தப் பாத்திரத்தின் திரவியங்களால் முடியாமல், கண்ணாடிப்பாத்திரம் பல துண்டுகளாக உடைந்துபோயிற்று. இது

* Read at the Madura and Ramnad Districts' Theosophical Conference held at Sivaganga.

அவர் செய்த அநேக பரீக்ஷைகளில் ஒன்று. இவ்விதம் எடிசன் என்பவராலும் டின்டல் என்பவராலும் சப்தத்துக்கு, ஒரு உருவத்தை உண்டாக்கவும், காப்பாற்றவும், அழிக்கவும் சக்தியுண்டென்பது பிரத்தியக்ஷமாய்க் காட்டப்பட்டிருக்கின்றது. நமது சாஸ்திரங்களில் சப்தம் (வாக்கு) உலகத்தையுண்டாக்குகிறதென்றும், அதை ரக்ஷிக்கிறதென்றும், முடிவில் அதை அழிக்கிறதென்றும் சொல்லியிருக்கின்றது. இதையே சப்த பிரஹ்மம் என்பார் மேலோர். இப்படியே விவிலிய நூலில் செயின்ட் ஜான் என்பாருடைய காஸ்பலில், ஆதியில் சப்தம் (Word)தான் இருந்ததென்றும், அது கடவுளிடமிருந்து வந்ததென்றும், அதுவே கடவுளென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

2. பிரகிருதத்தில் நாம் எண்ணத்தைப்பற்றிய விசாரணையில் சப்தத்தைப்பற்றி இவ்வளவு சொல்வானேன் என்று நினைக்கலாம். இதற்கு இரண்டு காரணங்களிருக்கின்றன. (1) கெட்ட எண்ணங்களை நாம் நினைக்கக்கூடாதென்பதற்கு பின்னால் அநேக காரணங்கள் சொல்லப்போகிறேன். அதே காரணங்கள் கெட்ட வார்த்தைகளை நாம் உச்சரிக்கக்கூடாதென்பதைக் காட்டும். (2) பிரஹ்மஞான சபையாரால் வெளிவந்திருக்கிற அநேக கிரந்தங்களில் சப்தத்தைப் போலவே எண்ணங்களுக்கும் உருவமுண்டு எனக்கூறப்படுகிறது. எப்படி சப்தமானது ஸ்தூல ஆகாச அலைகள் மூலமாய் உருவத்தை உண்டு பண்ணுகிறதோ அப்படியே எண்ணமானது அதிக நட்பமான ஆகாயத்தில் உருவத்தையுண்டுபண்ணுகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பார்த்து, அநேக ஐரோப்பிய சாஸ்திரிகள் சப்தத்துக்கு உருவமுண்டென்று காட்ட யந்திரம் கண்டுபிடித்ததுபோல எண்ணங்களின் உருவங்களையும் ஸ்தூலக்கண்ணுக்குப் புலப்படும்படியான உபாயத்தைக் கண்டுபிடிக்க எத்தனம் செய்தார்கள். பாரிஸ் நகரிலுள்ள ஒரு சாஸ்திரி நாம் நினைக்கிற எண்ணங்களின் உருவத்தை போட்டகிருப் படம் எடுக்கும்படியாக சில யுக்திகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த போட்டகிருப் இயந்திரத்தின் முன்னால் ஒருவனை நிறுத்தி, அவனைத் தன்மனத்தில் ஒரு வஸ்துவைப்பற்றிச் சற்றுநேரம் நினைக்கும்படி செய்தால், அவன் நினைத்த எண்ணம் ஒருவித உருவமாக போட்டகிருப்பில் விழுகிறதாம்.

3. இது நிற்க, பிரஹ்மஞானசபையில் திவ்யதிருஷ்டியுள்ளவர்கள் சிலர் இருக்கின்றார்கள். இவர்கள் மனிதர்களுடைய கோபமான எண்ணங்கள், சந்தோஷமான எண்ணங்கள், அன்புள்ள எண்ணங்கள் இன்னும் அனேகவிதமானஎண்ணங்களின் உருவங்களைத் திவ்யதிருஷ்டியால் பிரத்தியக்ஷமாகப்பார்த்து அவ்வுருவங்களைப்படங்களாகப் புஸ்தகங்களில் வரைந்திருக்கின்றார்கள். எண்ணங்களுக்கு உருவமுண்டு என்பதைப்பற்றி நமக்குள் அனேக சாக்ஷிகள் இருக்கின்றன. ஆனால் அவைகளை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கிறதில்லை. ஒருவன் தன் விரோதியின் பேரில் சூனியம் வைத்து அவனுக்கு அனேக தீங்குகள் செய்வதும் சில சமயம் அவனைக்கொன்று விடுகிறதுமுண்டென்றுநாம்கேள்விப்பட்டிருக்கிறோம். சிலருக்கு நேரிலும் தெரிந்திருக்கலாம். அதன் உண்மை என்னவென்று விசாரிப்போம். தன் விரோதியைக் கெடுக்கவேண்டுமென்று நினைக்கிற ஒருவன் ஒரு சூனியம் வைக்கிறவனின் உதவியைக் கோருகிறான். அந்தசூனியவாதி அந்த விரோதியை ஒரு தடவை தன் கண்ணால் பார்த்துக்கொண்டு தனிமையான இடத்தில் வந்து அந்த விரோதிக்குப் பிரதிநிதியாக ஒரு பிரதிமையைச் செய்கிறான். அதைத் தன் முன்வைத்துக்கொண்டும், அவ்விரோதியின் உருவத்தைத் தன் மனத்தில் நினைத்தும் சில ஆபிசார மந்திரங்களைப் பிரயோகிக்கின்றான். அம்மந்திரங்கள் உருவங்களாகப் புறப்பட்டு அந்த விரோதியைத் தாக்கி அவனுக்குத் தீமையை விளைவிக்கின்றன. இவை அழிக்கும் உருவங்கள். அதர்வணவேத மந்திரங்களின் பிரயோகங்கள் எல்லாம் இம்மாதிரியே. மஹாபாரத யுத்தத்தில் இருதரத்திலும் மந்திரத்தால் உண்டுபண்ணப்பட்ட அஸ்திரங்கள் இத்தன்மையனவாம். எண்ணங்களுக்கு ரக்ஷிக்கும் சக்தி உண்டென்பதற்கு திருஷ்டாந்தம்: ஒருவன் வியாதியினால் பிடிக்கப்பட்டிருந்தால் சூரிய நமஸ்காரம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதாவது, சூரிய நமஸ்காரத்துக்காக ஏற்பட்டிருக்கிறமந்திரங்கள்மனத்தில்தியானிக்கப்பட்டவுடனே அவைகள் நல்ல உருவங்களாகக் கிளம்பி அவ்வியாதியஸ்தனுடைய வியாதிகளைப்போக்கி சூரியனிடமிருந்து பிராணசக்தியை அவன் சரீரத்தில் புகட்டும். அதினால் அவன் ஆரோக்கியத்தை அடைவான். இவ்விதம் அனேகம் பார்த்தும் கேட்டுமிருக்கின்றோம். இவ்விஷயங்களை

வற்புறுத்திக்காட்டுகிற சாந்தோக்கிய உபநிஷத், 3-வது அத்தியாயம், 14-வது காண்டம், 1-வது மந்திரத்தில்,

"𑌅𑌥𑌖𑌲𑍁𑌕𑍍𑌰𑌤𑍁𑌮𑌯𑌃𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌸𑍍𑌮𑌿𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑍇𑌪𑍁-
𑌰𑍁𑌷𑍋𑌭𑌵𑌤𑌿𑌤𑌥𑍇𑌤𑌃𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌭𑌵𑌤𑌿"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, மனிதன் எப்படி நினைக்கிறானோவப்படியாகிறான். இந்த ஜன்மத்தில் எப்படி எண்ணுகிறானோ அடுத்த ஜன்மத்தில் அவ்விதமாக ஆகிறான். இப்படியே பகவத்கீதை, 6-வது அத்தியாயம், 8-வது ஸ்லோகத்தில்,

"𑌯𑌂 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌭𑌾𑌵𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍।
𑌤𑌂𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃॥"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது,எவன் அந்தியகாலத்தில் எதை நினைத்துக்கொண்டு உயிரை விடுகிறானோ அடுத்த ஜன்மத்தில் அதையவன் அடைவான்.

4. இவ்விதம் எண்ணங்களுக்கு ரூபமுண்டென்பதைப்பற்றிச் சொன்னோம். இனிமேல் மனிதர்களுடைய நல்ல எண்ணங்கள் தீய எண்ணங்களின் பயனைப்பற்றிச்சொல்லுவோம். எண்ணமானது ஈசுவரனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு சக்தி. மனிதனுக்குக் கீழ்ப்பட்ட ஜந்துக்களுக்கு இந்த சக்தி கிடையாது. எப்போது இந்தசக்தி நமக்குக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அப்போது அதை உபயோகித்தலில் நமக்கு ஒருஉத்தரவாதம் உண்டு. இதையறிந்து சரியாய் உபயோகிக்கிறவர்கள் மிகவும் சிலர். அனேகர் அறிவின்மையால் சதா வீண் எண்ணங்களை எண்ணித் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தீமையை விளைவிக்கின்றார்கள். நம் மனம் எப்போதும் சலித்துக்கொண்டேயிருக்கிறது, யாதேனும் ஒரு எண்ணத்தை எண்ணிக்கொண்டிருக்கும்,ஒருநிமிஷமாவது வெறுமையாயிருக்கிறதில்லை. மனது மகாசஞ்சலமுள்ளதாயிருக்கின்றது. அதை அடக்குவது வெகு கடினமாயிருக்கிறது. காற்றைப் பிடித்துக் கரகத்தில் அடைப்பது எப்படி பிரயாஸமோ அப்படி இருக்கிறது என்று அர்ச்சுனன் கேட்டதற்கு,பகவான் நிச்சயமாய் மனதையடக்குவது வெகு கஷ்டம். ஆனால் அதை அப்பியாசத்தினாலும் வைராக்கியத்தினாலும்

ஜயிக்கலாம் என்று சொன்னார். இப்படி மனம் எப்போதும் எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கிறதே, இந்த எண்ணங்கள் எண்ணுகிறவன் மட்டில் சாதகமோ பாதகமோ செய்கிறதாயிருந்தால் சரி அந்த மட்டிலிருக்கிறதில்லை, பிறரையும் பாதிக்கிறது. எப்படி பாதிக்கிறது என்பதற்கு திருஷ்டாந்தம்: இரண்டு சிநேகிதர்கள் சந்திக்கிறார்கள். அவர்களில் ஒருவன் மற்றவனைப்பார்த்து, நான் இன்றிரவு நாடகத்துக்குப் போகவேண்டுமென்று நினைக்கிறேன் என்று சொல்லுகிறான். மற்றவன், நானும் அங்கே போகவேண்டுமென்று இப்போதுதான் நினைத்தேன் என்று சொல்லுகிறான். இது என்ன ஆச்சரியம்! ஒருவனுக்கு உண்டாகிற எண்ணம் மற்றவனுக்கும் உண்டாகின்றது. இதன் உண்மை யாதெனில், ஒருவன் மனத்தில் ஒரு எண்ணம் உண்டானவுடனே அது அலைகள் ரூபமாக வெளியேறிப் பரவுகிறது. அடுத்து நிற்கிறவன் அதற்கு அனுகுணமான சுபாவமுள்ளவனாயிருந்தால் அவன் மனத்தில் உடனே பிரவேசித்து, அந்த எண்ணத்தை உண்டாக்குகிறது. இன்னொரு விஷயம்: சில வருஷங்களுக்குமுன் "சுதேசி" "வந்தேமாதரம்" என்ற வார்த்தைகளை நாம் கேள்விப்பட்டதேயில்லை. இந்த வார்த்தைகள்முதலில் வங்காளத்தில் உண்டாயின. அவ்விடத்தில் அனேக லக்ஷம் மனிதர்கள் மனத்தில் இந்த எண்ணங்கள் உண்டாகி அவைகள்பெரிய அலைகளாகக்கிளம்பி இந்தியா முழுவதும் பரவின. நம்முடைய பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இவ்விஷயங்களைப்பற்றி நாம் பாடம் சொல்லிக்கொடுத்தோமா? இல்லையே! அப்படி இருந்தும் அவைகள் அவர்கள் மனத்தில் எவ்வளவு ஸ்திரமாய் வேரூன்றியிருக்கின்றன! வங்காளத்திலும் சிறு பிள்ளைகளின் மனங்களில்தான் இவ்வெண்ணங்கள் அதிகமாய்க் குடிகொண்டிருக்கின்றன. அப்படியே இங்கும் சிறுவர்கள் மனங்களில் தான் இவ்வெண்ணங்கள் பலமாய்ப் பற்றியிருக்கின்றன. இதுதான் ஒரு தேசத்தார்கள் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரே விதமாய் நினைப்பதற்கும், மற்றொருதேசத்தார் அதேவிஷயத்தை வேறு விதமாய் நினைப்பதற்கும் காரணம். புனர் ஜன்மம், கர்மம் இவைகளைப்பற்றி நம்முடைய சிறு பிள்ளைகள்கூட இயற்கையான விஷயமாக எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதே விஷயங்கள் ஐரோப்பியர்களுக்கு இயற்கையானவை என்று தோன்றுவதில்லை.

5. மனிதனுடைய எண்ணங்கள் பல வகுப்புக்களாகப் பிரிக்கப்படலாம். அவைகளில் அடியிற்கண்ட மூன்று வகுப்புக்கள் முக்கியமானவை: (1) பிறரைப்பற்றிய எண்ணங்கள் (2) தன்னைப்பற்றிய எண்ணங்கள் (3) மேற்சொன்ன இரண்டு விதத்திலும் சேராத எண்ணங்கள். முதலாவது வகுப்பான பிறரைப்பற்றிய எண்ணங்கள் எவையென்றால்: பிறரைப்பற்றிப் பொறாமைப்படுதல். அவர் கெட்டுப்போகவேண்டுமென்று விரும்புதல். இயற்கையாய்ப் பிறருக்குக் கெடுதல்வந்தால் அதைப்பற்றிச் சந்தோஷமடைதல். அல்லது தன் பந்துமித்திரகளத்திராதிகளுக்கு ஐசுவரியமுண்டாகவேண்டும், அவர்கள் ரோகமில்லாமல் திடமாயிருக்கவேண்டும், அவர்களுக்கு யசஸ், கீர்த்தி உண்டாகவேண்டும். இன்னும் இவைபோன்ற அனேக எண்ணங்களாம். இவைகளில் தீமையான எண்ணங்கள் கொடுமையான உருவங்களாகப் புறப்பட்டு இவன்யாரைக்குறித்து எண்ணுகின்றானோ அவனிடம் செல்லுகின்றன. அப்போது அந்த அயலானுடைய மனமானது எதாவது ஒரு விஷயத்தில்ஆழ்ந்த யோசனையுடனிருக்குமாகில் இவ்வுருவங்கள் அவனிடம் பிரவேசிக்காமல் வெளியில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும், அவனுடைய ஆழ்ந்தயோசனை நீங்கினவுடனே அவனிடம் சென்று அவனுக்குத் தீங்கு உண்டாக்கும். அவன் பரிசுத்தமான மனமுடையவனாயிருப்பானாகில் அவ்வுருவங்கள் அவனிடம் பிரவேசியாமல் போனவழியே திரும்பிவந்து அனுப்பினவன் பேரிலேயே பாய்ந்து, அவனுக்கு அதிக தீமையை உண்டுபண்ணும். சிலசமயம் அவனைக் கொன்றுவிடும்.

6. சூனியம் வைப்பவன் ஒரு பரிசுத்தவான் பேரில் ஆபிசார மந்திரம் பிரயோகம் செய்து அது பலிக்காமல் திரும்பி வந்து மந்திரவாதியைக் கொன்றுவிடுமென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படியே நல்ல எண்ணங்கள் நல்ல உருவங்களாகப்போய்இவன் யாரைக்குறிப்பிட்டு எண்ணுகிறானோ அவன் மனத்தினிடம் பிரவேசித்து, அவனுக்கு நன்மையைச்செய்யும், எப்போதும் அவன் வேறு யோசனையிலிருந்தால் காத்திருந்து அவன் யோசனை கலைந்தவுடன் அவனிடம் பிரவேசிக்கும். இவன் யாரைக்குறித்து நல்ல எண்ணங்களை நினைக்கிறானோ அவன் எப்போதும் கெட்டசிந்தனையுள்ளவனாகவும்

நல்ல எண்ணங்களின் பயனைப் பெற்றுக்கொள்ள அபாத்திரனாகவு மிருப்பானாகில், அந்தஉருவங்கள் திரும்பிவந்து அனுப்பினவனுக்கு அதிக நன்மையைப் பயக்கும். இக்காரணங்களால் நாம் எல்லாரை யும் குறித்து நல்ல எண்ணங்களையே நினைக்கவேண்டுமென்றும் நமக்கு விரோதியாயிருந்தாலும் கூட அவன் விஷயத்திலும் நல்ல எண்ணங்களையே நினைக்கவேண்டுமென்றும் பெரியோர் உபதே சிக்கிறார். "நன்றே நினைமின் நமனில்லை" என்றார் திருமூலர். இந்த முதலாவது வகுப்பைச் சேர்ந்த எண்ணங்களின் உருவங்கள் வெளியே போகிற உருவங்களாம்.

7. 2-வது வகுப்பைச் சேர்ந்த தன்னைப்பற்றிய எண்ணங்க ளாவன: எனக்கு ஐசுவரியமுண்டாகவேண்டும், நான் எடுத்தகாரிய ம் நிறைவேறவேண்டும். இவ்விதம் தன்னைப்பற்றியே எண்ணுத லாம். இவ்வெண்ணங்களின் உருவங்கள் வெளியேறிப் போகாமல் தன்னையே சுற்றிச்சுற்றிக்கொண்டிருக்கும். மனிதர்களில் அனேக ர்களுக்கு இவ்வெண்ணங்கள் தான் அதிகம். இந்த எண்ணங்களினு லும் அனேக நிமைகளுண்டு. எப்படியென்றால், நாம் நம்முடைய சொந்த விஷயத்தைப் பற்றி ஒரு விதமாய்ச் செய்கிறதென்று நிர் மானிக்கிறோம். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நம்மைச் சுற்றிக்கொ ண்டிருக்கிற இவ்வுருவங்கள் நமக்குள் பிரவேசிக்கும். முன் நிர்மா னித்த விஷயத்தைப்பற்றி மறுபடியும் ஆலோசிக்க ஆரம்பித்து வேறு விதமாய்த் தீர்மானிப்போம். இப்படி அடிக்கடி இவ்வெண் ணங்கள்உண்டாகி மனத்திற்கு வியாகூலத்தைக்கொடுக்கும். மேலும் அவ்வெண்ணங்கள் கெட்டதாயிருக்குமாகில் அந்தக்கெடுதலைச்செய் யும்படி அடிக்கடி நம் மனத்தைத் தூண்டும். இந்த இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த எண்ணங்களின் உருவங்கள் இவன் எங்கே போனாலும் தன் நிழல்போல அவனைத் தொடர்ந்துகொண்டேபோ கும்.

8. 3-வது வகுப்பைச்சேர்ந்த எண்ணங்கள் ஒன்றிலும் ஒட் டாமல் விபத்தப்படாதவைகளாம். அதாவது சோம்பேறித்தனமாய் ஒருவன் உட்கார்ந்துகொண்டிருக்கும்போதாவது நடக்கும்போதா வது எதிர்ப்படும் வண்டி, குதிரை, மனிதன், பறவை முதலானவை

103



களைப்பற்றி மனத்தில் தோன்றியபடி வியக்தப்படாமல் மனம் நினைப்புக் கொள்ளும். இந்த எண்ணங்களின் உருவங்கள் ஒரு குறிப்பிட்ட நெறியில் செல்கின்றனவல்ல, தன்னைச் சுற்றிக்கொண்டிருப்பவையுமில்லை. இவைகள் பல இடங்களில் சுற்றிக்கொண்டு அவைகளுக்கு அனுகுணமான மனத்தையுடைய மனிதர்களிடத்தில் பிரவேசிக்கும். இதற்கு உதாரணம்: நாம் யாதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கும்போது சில சமயத்தில் இதற்கு சம்பந்தமில்லாத ஒரு குரங்கு அல்லது ஒரு கோழியின் உருவம் மனத்தில் கிளம்பும், அதைப்பற்றி நமக்கே ஆச்சரியமுண்டாகும். தெருவில் போகிறவன் இந்த ஜெக்துக்களைப்பற்றி எண்ணின உருவங்கள் நம் மனத்தில் பிரவேசித்தனவேயல்லாது வேறில்லை. இவ்வித எண்ணங்களுள்ளவர்கள் தான் மனிதரில் பெரும்பான்மையோர்.

9. எண்ணங்களின் செயல்களைப்பற்றி இதுவரை சொன்னோம். இதையறிந்துகொண்டு நம்முடையவும் பிறருடையவும் நன்மைக்காக எண்ணங்களை நாம் எப்படி உபயோகிக்கவேண்டிய தென்பதைப்பற்றிச் சொல்லுவோம். மனமே நாமல்லவென்றும், மனம் நம்முடைய கருவி என்றும் முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. மனத்தைத் தருசு நிலம்போல் பாழாகவும் சோம்பலாகவும் வைத்துக்கொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் பிறருடைய எண்ணங்களை, அதிலும் அவர்களுடைய கெட்ட எண்ணங்களை அதின்கண் பிரவேசித்துக்கொண்டிருக்கும். ஆகையால் மனத்தை நேர்வழியில் பயிற்சிசெய்ய உபாயங்கள் யாதெனில்: (1) ஒருவன் என்ன காரியம் செய்தாலும் அதாவது ஒரு கடிதம் எழுதினாலும், புத்தகம் வாசித்தாலும், மனம்வேறொன்றிலும் செல்லாமல் எடுத்த காரியத்தில் ஒருமுகப்பட்டு அதைச் சரியாய்ச் செய்யவேண்டும். ஒவ்வொரு சிறிய காரியத்திலும் மனத்தை இவ்விதம் பயிற்சிசெய்து வந்தால், மனம், தான் நினைத்தபடி ஓடாமல் இவன் சுவாதீனத்துக்கு வரும். ஒரு நிமிஷமாவது மனத்தைச் சோம்பலாய் அலையும்படி விடாமல் ஏதாவது உபயோகமுள்ள படிப்பு, சம்பாஷணை, அல்லது பெரியோர்மூலம் ஸத்விஷயத்தைக் கேட்டல், ஒரு தொழில் செய்தல் இவ்விதமாக மனம் வேலைசெய்தல் வேண்டும்.

10. மேற்சொன்னபடி ஒருவன் எப்போதும் காரியங்கள் செய்துகொண்டாவது அல்லது படித்துக்கொண்டாவது இருக்க முடியுமா? சில சமயம் வெளியில் நடந்து போகவேண்டியதாயும் வேறு ஊர்களுக்கு வண்டியிலும் ரெயிலிலும் போகவேண்டியும் வருமன்றோ? அப்போது அவன் மனத்தை எப்படி உபயோகிப்பதென்றால் ஒவ்வொருவருக்கும் மனத்துக்கு உயர் நலம் அமைந்ததான, பிரீதியுள்ள விஷயம் ஒன்று எப்போதும் இருக்கவேண்டியது. அனேகர்களுக்கு அப்படியிருக்கிறது. சிலருக்கு இல்லாவிட்டால் அவர் அத்தன்மையான விஷயமொன்றைத் தீர்க்கமாய் ஆலோசித்துத் தீர்மானம் செய்துகொள்ளவேண்டியது. இதற்கு இங்கிலீஷில் Hobby (மனத்திற்கு இனிய தொழில்) என்று சொல்லுகிறது. மனத்துக்கு யாதொரு ஜோலியுமில்லாவிட்டால் Hobby என்று சொல்லுகிற அதிக பிரீதியுள்ள அவ்விஷயத்தில் மனம் செல்லும். ஆனால் இது கெடுதலான விஷயமாயிருக்கக்கூடாது. ஒருவன் சங்கீதத்தில் ரசிகனாயிருந்தால் மனத்திற்கு வேலையில்லாதிருக்கும்போது அந்த சங்கீதவிஷயத்திலேயே மனம்செல்லும். ஒருவனுக்குக் கணிதம் முதலான சாஸ்திரங்களில் பிரீதி இருந்தால் மனம் அவைகளிற் செல்லும். இப்படியே பக்தியுள்ளவன் தான் வழிபடும் கடவுளைப்பற்றி நினைப்பான். ஒருவனுக்கு ஒருவித Hobby யுமில்லாவிட்டால் அவசியம் ஒன்றைச் சிருஷ்டித்துக்கொள்ளவேண்டியது. அப்போது தான் மனது அலையாது, வீண் எண்ணங்கள் கொள்ளாது.

11. நம்முடைய மனோ சக்தி சிதறி, வியர்த்தப்படாமல் இருக்கும்படி காப்பாற்றவேண்டும். இந்த உண்மையை யறியாமல் அனேகர் இச்சக்தியை வீணாக விரயம் செய்கிறார்கள். உபயோகமற்ற அற்ப விஷயங்களைப்பற்றி மனம் சஞ்சலமடைகிறது. சென்றுபோன காரியத்தைப்பற்றித் திரும்பத்திரும்பச் சிந்தித்து வியாகூலமடைவதும் ஒருகாரியத்தை யடையமுயல்வதில் விபரீதமாய்த்துடிக்கிறதும், கோபப்படுகிறதும் இவ்விதமாய் மனோ சக்தியைச் சிதறவிடுகிறார்கள். இவ்விதமாய்ச் செல்லாமல் மனம் சாந்தமாயிருக்கும்படி பழக்குவோமானால், இந்தச் சக்தியானது நல்ல விஷயங்களில் அதிக தீவிரமாய்ச் சென்று விசேஷ பயனைக் கொடுக்கும்.

12. தான் கொண்ட அபிப்பிராயத்தை ஸ்திரப்படுத்த வீண் வாதம் செய்தல். அதாவது மதசம்பந்தமாகவாவது, அல்லது இராஜாங்கமுறை சம்பந்தமாகவாவது ஒருவன் ஒருவிதமாய் அபிப்பிராயம் கொண்டு மற்றவர்களும் அதே அபிப்பிராயத்துக்கு இணங்கி நடக்கவேண்டுமென்று வீணாக முயலுகிறான். ஒரே விஷயத்தில் பல நோக்கங்களால் பலருக்கு பல அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஒவ்வொன்றிலும் சிற்சில உண்மைகளிருக்கும். உண்மையானது ஒருவித அபிப்பிராயத்தில் மட்டும் பூராவாக வெளிப்படமாட்டாது. பல அபிப்பிராயங்களினால் பூராவாக வெளியாகும். இதை மறந்து வீண்வாதம் செய்கிறார்கள். அதைத் தவிர்க்கவேண்டும்.

இவைபோன்ற அநேக விஷயங்களை நாம் கவனித்தால், நாம் மனோபலமும் மதிபலமும் பெறுவோம்.

வி. வெங்குசாமி அய்யர்.

## நன்மொழி

99. உன்முன் இலையில் இட்டிருக்கும் உணவு பதார்த்தங்களில், சரீரத்தின் வளர்ச்சிக்கு அனுகூலமானதை அறிந்து உண்பாய். மற்றவைகளைத் தவிர்ப்பாய். உன் இறைமைக்குச் சாதகமானதும், பித்தாசயத்தைச் சாந்தப்படுத்தும் தன்மையானதும், இரத்தத்தைவிருத்திசெய்யத்தக்கதும், பிராணி ஹிம்சையால் ஏற்படாததும், பாபம் கொடுமைகாரணமாய் உண்டாகாததுமான உணவை நாடுவாய். மித ஆகாரம் கொள்வாய். அகால போஜனத்தைத் தவிர். லகரி பதார்த்தங்களையும் பானங்களையும் விலக்கு. உண்ணும்போது எக்கவலையையும் தவிர். எல்லாம் இறைவனின் அருளால் கிடைத்ததெனக் கருது. வீண் உரையாடாதே. மௌனமாய் இரு.

100. "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே. அல்கா நல்குரவு அவாவெனப்படுமே" இது ஆன்றோர் வாக்கு.

101. இக்காலத்திலோ, பதட்டமும் பரபரப்பும் மிகவுமுள்ளன. ஒரே விஷயத்தை அகன்றும் சூழ்ந்தும் அறிபவன் அரியன். மனம் பலவிஷயங்களை நாடித் தவித்தவித்து ஓடும். ஒன்றிலேயே நிலைகொள்ளாது. ஒரு சாஸ்திரத்தை, அல்லது ஒரு விஷயத்தை வேர் முதல் விரிவான சாகைகள் கூறாகக் கற்கின்றவரை இக்காலத்தில் காணோமே!

## பிரஹ்மஞானசபையும் சகோதரபாவமும்.

(60-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாங்கள் கொண்ட காரியத்தைச் சாதிக்க, அவர்கள் சுயநயம் கருதும் சுபாவம், அவர்களின் தீய சுபாவம் முதலியனவற்றையே சாதனங்களாக அமைத்துக்கொள்ளுவார்கள். ஸௌதே (Southey) என்ற கவிஞர் சொல்லுகிறபடி, "தீயர்கள், தாம்தெரியவே, ஈசுவர சங்கற்பங்களை நிறைவேற்றுகிறார்கள்." "கடவுளடியார்களுக்கு எல்லாச் செய்கைகளும் நன்மையாகவே முடியும்." இப்படிச் சொன்னது அவன் அவன் சொந்த கர்ம கதியைப்பற்றியது. இந்த தர்மமே பெரிய விரிவான கைங்கரியத்திலும் ஏற்பதாகும். உதாரணமாக, கிறிஸ்துமத ஸம்பிரதாயத்தின் மூடபக்தியும் பிடிவாதமும் உபயோகமற்றதல்ல. அது சாதாரண மூடஜனங்களுக்கு, மதத்தில், ஒருவிதமான முரட்டுத்தனமான நம்பிக்கையையாவது உண்டாக்கியிருக்கின்றது. வியாபார விஷயங்களின் சுயலாபம் பாராட்டுதல் தீயதுதான். ஆனால், அதன் சாதகத்தால், ஜனங்களுக்கு மனம் உறுதிப்பாட்டையும், மனம் ஏகாக்கிரதையையும், உலக யோக க்ஷேமத்தை நடத்துகின்ற மஹாபுருஷர்கள், உண்டுபண்ணுவார்கள். இனிவரும் ஜன்மாந்தரங்களில், இந்நற்குணங்கள் மிகவும் பயன்படும்.

14. அதனால் நாம் ஒவ்வொருவரும் மஹான்கள் உத்தேசித்து இருக்கின்ற விவஸ்தையில், யாதேனும் ஒரு நன்மையான கைங்கரியத்தை ஏற்கவேண்டும். அச்சமயம் அதை நாம் ஏற்காமல் போனால், வேறு ஒருவன் அதைக் கொண்டுசெலுத்த ஏற்படுவான்! பெரியார் சங்கற்பம் எவ்விதமும் நிறைவேறும்; நாம் தான் நற்கைங்கரியம் செய்யும் சமயத்தை இழந்தவராவோம்.

15. அச்சமயம் நேரிட்டும், சிலர் அதை அங்கீகரித்தாரில்லை. அதைத் தம் கைநழுவவிட்டார். அக்காரணத்தினாலே, அவர்போல் நடவாமல், அவர் நழுவவிட்ட காரியத்தையும் நம் காரியத்தையும், தலைமேற்கொண்டு நாம் கொண்டுசெலுத்த அதிகத் தீவிரமாக முயலவேண்டும். சிலர் கைவிட்டார்களே, அதனால் பெரியார் எடுத்தகாரியம் சோர்வுபடுமெனக் கருதற்க. அதனால் பயங்கொள்ளற்க. அச்சம

யத்தை நம்முடைய சிநேகிதர்கள் மனநொய்மையாலும், அறிவின்மையாலும் தவறவிட்டார்களென வருந்துக. தங்களுடைய உண்மையான சொந்த லாபத்துக்கும் விரோதமாகவும் செய்துகொண்டார்களே எனவும் நாம் விசனிக்கத்தக்கது. தாங்கள் செய்தது தவறென்று இந்த ஜன்மத்திலேயே உணர்வார்கள். அல்லது பின்வரும் ஜன்மத்திலேயாவது உணர்வார்கள். அவர்கள் தவறு எப்படியிருப்பினும், ஈசுவர சங்கற்பமான பெரியார் காரியம் நன்றாக நடக்கும். அதற்குக் குறைவில்லை.

16. உலக விகாசமுறை (Evolution) என்பது, உலக சம்பந்தமான மற்றகாரியத்தைப் போன்றதாகும், ரெயில்வேவிஷயத்தைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்வோம். ரயில்வேகம்பெனிக்கும் யாத்திரைக்காரர்களுக்கும்இன்னார் இந்த கட்டையைப் பதித்தார், இன்னார் இந்த ஆணியை அடித்தார், இன்னார் இந்தப் பாலத்தைக்கட்டினார், என்றவிதமான ஆசங்கைகள் உண்டாகா, உண்டாகவேண்டுவதுமில்லை. அவைகள் நன்றாய்ச்செய்யப்பட்டு இருக்கவேண்டுமென்பது ஒன்றுதான் அவர்கள் கவனத்தில் வரும். சிறுவேலைக்காரர்களுக்கோ என்றால், அச்சிறு வேலைகளால் கூலிகள் ஏற்படுகின்றமையால், அச்சிறு வேலைகள் அவர்கள் கவனத்திலும் மனத்திலும் நன்றாய்ப் பதியும். அவர்களுக்கு அவை முக்கியமானவையாம். நன்றாய் வேலைசெய்தால், நல்ல கூலி கிடைக்கும், இன்றேல் சொற்பகூலி கிடைக்கும். அல்லது இல்லாமற்போய்விடும். ஒருவன் குடித்து வேலைக்கு வராமல் போவான். அதனால் என்ன? வேறு ஒரு வேலைக்காரனை வைத்துக்கொண்டு காரியம் நிறைவேற்றப்படும். குடித்துப்போனவன் மறுநாள் தானே வருவான். அவ்விதமே நம்மவர்களில் அநேகர் மதிகெட்டு, தான் என்ற அகங்காரம் மேற்கொண்டு, சமயத்தை நழுவவிட்டுப் போயிருக்கின்றார்கள். சபையினின்று புத்திஹீனமாய் விலகி இருக்கின்றார்கள், பின்னர் அவர்களும் காலக்கிரமத்தில் திரும்புவார்கள். பெரியார் சங்கற்பம் நிறைவேறுமா, அல்லவா என்பது கேள்வியன்று. அதில் சந்தேகம்வேண்டாம். ஆனால் நம்மவர்கள் யார் இச்சமயத்தை அநுசரித்து கைங்கரியம் செய்வார்கள் என்பதுதான் கேள்வி.

17. இக்காலத்தில், நாம் இத்தகைய பெரிய காரியத்தில் யாதேனும் ஒரு காரியத்தைச் செய்ய அருகராக இருக்கின்றோமா என பரீக்ஷிக்கப்படுகின்றோம். சிலர் தான் என்ற மமதையால், சுதந்தரம்பாராட்டி, வீணாக எதிர்க்கின்றார்கள். இவர்கள் தங்களை மறந்து காரியத்திலேயே கண்ணாக இருக்க இயலாதார். இவர்கள் தவறுகிறார்கள். அகங்காரம் மமகாரம் இன்னும் இவர்களிடம் படபடப்பாய்த் துடித்துக்கொண்டு இருக்கின்றன. அதனால், யாதேனும்ஒருநூதனசம்பவம் நேரிடுங்கால், அதைஅறியாதாராய்த் திகைப்புக்கொள்ளுகிறார்கள். மனத்தடுமாற்றம்பெறுகிறார்கள். இவர்களைப் பற்றி நினைக்க வருத்தமாக இருக்கிறது. ஆயினும் பாதகமில்லை. இவர்கள் இந்நிலையில் இருப்பது சொற்பகாலம் தான். இந்த ஜன்மத்தில், உற்ற சமயத்தைக் கைவிட்டார்கள். அதைப் பற்றி நடக்கப் போதுமான தைரியமில்லாதவராய்விட்டார்கள். இனி எத்தனையோ ஜன்மங்கள் அவர்கள் எடுக்கப்போகின்றார்கள். அவர்கள் ஸ்தானத்தில் வேலைசெய்ய மற்றவர்கள் வருவார்கள். பெரியார் சங்கற்பம் நிறைவேறும் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகம் வேண்டாம். அவர்கள் கைங்கரியம் செய்ய நாம் ஏற்போம். உண்மை தெரியாமல் ஏனையர் விலகிவிட்டார்கள் என்று நினைக்கவேண்டும். கீழ்ப்படியாத துடுக்கான இளைஞர்கள் பெற்றோர்களிடம் கோபித்துக்கொண்டு, ஓடி ஒளிகின்றமைபோல, இவர்களும் இஜ் ஜன்மத்தில் மஹாத்மாக்களைத் தவிர்த்தார்கள். பசிவந்தமேல், துடுக்கான இளைஞர்கள் பெற்றோர்களிடம் திரும்புவார்கள். அவ்விதமே, உண்மையினுருசியைக் கண்டறிந்து இவர்களும், பின்வரும் ஜன்மங்களில், மஹாத்துமாக்களின் பாதங்களை அடைவார்கள். நாம் தைரியமாக உறுதியாக நிற்கவேண்டும். என்ன கலகம் நேரிட்டாலும் என்ன குழப்பம் சம்பவித்தாலும், மனச்சாந்தமுள்ளவர்களாய் நாம் ஒழுகற்பாலேம்.

18. இச்சமயத்துக்கு ஏற்பநாம் நடைபெறத் துணிவோமாயில், நான், எனது என்ற அகந்தை மமதையைத் தவிர்க்கவேண்டும். நம்முடைய கோணலான துர்க்குணங்களை விடவேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நல்ல எண்ணத்தையும் உண்மைபெண்ணித்தியபாவத்

னை ஒழித்தல் வேண்டும். பிறரைப்பற்றிப், பிறர் என்பது ஒருவனாக இருந்தாலும் சரி ஒரு ஜாதியாராக இருந்தாலும் சரி, தீயவைகேட்பின், அவருடைய நலத்தைப் பாராட்டி உரைக்கவேண்டும். மேலும், கேட்ட விஷயத்தில், அதை நன்மையாக அர்த்தம் செய்யக்கூடுமானால் அவ்விதம் அர்த்தம் செய்து, அதன் விஷபாவனையைப் போக்குக. நம்முடைய வேலையெல்லாம் மஹான்களால் ஏற்படுத்திய யந்திரம் நேர்மையாகவும் சிக்கல் இல்லாமலும் இயங்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். நாம் ஒருங்கே சேர்ந்து ஐக்கியமுள்ள ஒரு சபையாகவும், உலகத்தில், நேர்மையும் சமாதானமும் உண்டாகும்படியாகவும் இருக்கற்பாலேம். மஹாபுருஷர்கள் உத்தேசித்திருக்கும் சங்கற்பமோ பெருமையுடையது. நேர்ந்திருக்கும் சமயமோ, கம்பீரமானது, கீர்த்திபயக்கத்தக்கது. அதைக் கைக்கொள்ளுவோமோ, அல்லது கைதவற விடுவோமோ?

19. இனி வரப்போகும் பெரிய காரியத்தை உத்தேசித்து, தினந்தினம் நேரும் சந்தர்ப்பங்களைக் கைவிடற்க, பராமுகம் பண்ணற்க. இதற்கும் ஒரு உதாரணம் ஒருவர் எனக்கு எழுதின கடிதத்தில் இருக்கின்றது. அதை நான் சொல்வேன்:— பிரஹ்மஞானக் கிளைச்சபைக்கு நான் விஷயங்களைப் போதிக்க வேண்டியிருக்கிறது. அது பெரிய உத்தரவாதமாக எனக்குத் தோன்றுகிறது. அதற்கு நான் அருகனல்லன். நான் தெரிந்துகொண்டவிஷயம் சொற்பம். நான் எவ்விதம் பிறர்க்குச்சொல்லிக்கொடுக்கிறது? என்றெழுதியுள்ளார். அதற்குப்பதில் அடியில் வருமாறு நான் எழுதினேன்:—"கிளைச் சபையால்தங்களுடைய உத்தரவாதத்தைப்பற்றிக்கவலைகொள்ளற்க. பிறருக்குக் கற்பித்தல்என்பது ஒருஉத்தரவாதமே. ஆயினும்அதைப் பிறருக்கு உதவிபுரிதல் என்று நினைப்பின், அது ஒருபெருமையான சுதந்தரமானது. அவ்விதம் நினையுங்கள். உண்மை தெரியவேண்டும் என, தாகமுள்ளவர்கள் அநேகர் இருக்கின்றார்கள். மஹாத்மாக்கள் தங்கள் முகமாக, இவர்களுக்கு ஞானம் உதவமாக வேண்டுமெனக்கருதி இப்பெருமையானசுதந்தரத்தைப் பிரியத்துடன் தங்களுக்கு அளித்திருக்கின்றார்கள். போதுமானபடி சாமான்விய உண்மைகளை நீங்கள் அறிவீர்கள். அவைகளை முன்னிலைத்துக்கொண்டு,

உங்களுடைய மாணவர்களுக்குச்சொல்லுங்கள், விவரணங்களில் பிசகுவராது. கற்பித்தல் உத்தரவாதமுள்ளது என்ற உணர்வு உங்களுக்கு இருக்கின்றமையால், தாங்கள் பிசகமாட்டீர்கள்."

20. பேசுகிறதிலும், உபந்நியாசங்கள் செய்வதிலும், புத்தகங்கள் எழுதுவதிலும், பெரிய உத்தரவாதம் இருக்கின்றது தான். அதை அதிகமாக உணரவேண்டுவதுதான். நம்முடைய சிநேகிதர்களில் சிலர் அபிப்பிராயத்தில், ஞானமுறையில் புத்தகம் எழுதுமுன்னர் எழுதுவோர் பூர்ணம்பெற்ற ஞானிகளாகவேண்டும் என்றும், அப்போதுதான், ஒருவிதமான பிசகும் ஏற்படாமல், உண்மைகளைச் சொல்ல இயலும் என்றும் சொல்லுகிறார்கள். அது ஒருவிதத்தில் நியாயம்தான். ஆனால் என் அபிப்பிராயத்தில், தெரிந்தவிஷயம் அறைகுறையாக இருப்பினும், தெரிந்ததைப் பிறருக்குக் கற்பித்தல் நலம் என்று நான் மதிக்கின்றேன். அனுபவத்தில் அவ்விதம் செய்தல் நன்மையாகத் தோன்றுகிறது. பூர்ணம்பெற்ற ஞானிகளானமேல் புத்தகம் எழுதப்பட்டால், அது குறைவில்லாததாகவே இருப்பதாகும். இந்தவிஷயத்தில் சந்தேகமில்லை. என் போலியரால் வெளிவந்த புத்தகங்கள் குறைவுள்ளவைகளாகவே இருக்கின்றன. இதிலும் சந்தேகமில்லை. அப்பதவிபெற்ற மேல் புத்தகம் எழுதுவதாக இருந்தால், ஆயிரக்கணக்கான வருஷங்கள் நீங்கள் காக்கவேண்டுமே! அதனால், இந்த நூற்றாண்டில் இச்சபையின் அனேக நோக்கங்கள் நிறைவேறுவது எங்ஙனம்! இவ்விதமே உங்கள் கைங்கரியமுமிருக்கின்றது என்று நீங்கள் யோசிக்கவேண்டும். எல்லாம் தெரிந்தமேல் பிறர்க்குக் கற்பிக்கலாம் என்றுஉங்கள் கிளைச்சபை சம்பந்தமாக நினைக்கலாம். அக்காலம் நேரிடுமுன், உங்கள் கிளைச்சபையின் கதி எவ்விதமாகும் என்று எண்ணுக.

ஓம் தத் ஸத்.

C. W. L. ப. நா.

# * அதிக சமீபத்தில் வருங்கால விசேஷம்.

1. நாம் இன்னது சம்பவிக்குமென்று அறியும்பொழுது அச் சம்பவத்திற்குக் காரணம் முன் நிகழ்ந்த சம்பவங்கள் என்ன என்று அறியவேண்டும். அதனால் பூர்வம் நிகழ்ந்தவைகள் என்னவென்பதை முதலிலும், தற்காலம் நிகழ்ந்துகொண்டிருப்பவைகளை இரண்டாவதாகவும், இனி வருங்காலத்தில் நிகழப்போவதை மூன்றாவதாகவும் தெரிந்துகொண்டு, அப்பால் நான்காவதாக வருங்காலத்திற்குத் தக்கவாறு எவ்விதம் முன் ஜாக்கிரதையை நாம் இப்பொழுதே கொள்ளவேண்டும் என்பதைப்பற்றியும் ஆராயவேண்டும். பிரஹ்மமே ஸத்தியம் ஜகத் மித்தை என்பது ஞானமுறையில் எல்லோரும் அறிந்திருக்கும் விஷயமே. மித்தை என்றால் இல்லை என்பது பொருளன்று. இருப்பதாகவும், அழிவதாகவும் மறுபடி தோன்றுவதுமாயிருப்பதற்கு மித்தை என்று பெயர். ஆகையால் நாம் பார்ப்பவைகளெல்லாம் அழியக்கூடியவைகளே. அழியக்கூடியவைகளெனின், வேறாக மாறக்கூடியவைகளாம். அவ்வாறு வேறு ஒரு ஸ்திதியை அடைந்திராவிடில் மீளவும் தோன்றுவதற்கு இடமேயில்லை. ஜகத்தானது தற்கால நிலைமையில் நாம் பார்க்கிறபடிக்கே பூர்வமும் இருந்தது என்றும், இனியும் இருக்கப்போகின்றது என்றும் எண்ணுவது தவறாம். இக்கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு முதலில் பூர்வீக ஸ்திதியைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

2. இப்பொழுது நாம் பார்க்கும் மனிதர்கள் திடீரென உலகத்தில் பிரவேசித்தார்கள் அல்லர். சுருக்கமாய்ச் சொல்லின், தற்காலம் எவ்வித யோக்கியதைகளுடன் கூடினவர்களாயிருக்கிறார்களோ, அவ்விதம் முன்னரும் இருந்தார்கள் இல்லை. ஆனால், ஆத்மகோடிகள் தாது(கல்)வர்க்கத்திற்கு முன்னும் எத்தனையோ சூட்சுமமான நிலைமைகளில் இருந்து அப்பால் படிப்படியாகத் தாதுவர்க்கம், தாவர (புல்,பூண்டு,செடிமுதலியன) வர்க்கம், மிருக வர்க்கம், பாதி மிருகம் பாதி மானிட வர்க்கம், அப்பால் யதார்த்த மானிட வர்க்கத்திலும், பின்னர் எத்தனையோ ஜன்மங்களில் பல பிரதேசங்களில் பலவித பக்குவங்களை அடைந்து, கடைசியாக இப்போது ஏற்பட்டிருக்கிறபடி மனிதர்களாக வந்திருக்கிறார்கள் என்று நாம் அறியலாம்.

3. நமது தேகேந்திரியாதிகளில் ஒவ்வொன்றும் ஓர் ஓர் காலத்தில் பக்குவமாகின்றதே ஒழிய ஏக காலத்தில் எல்லாம் பக்குவமாகின்றன அல்ல. நமது முயற்சியால் ஒவ்வொரு கரணமும் பக்குவமானாலுங்கூட பிறர் உதவி அன்றியில் சீக்கிரத்தில் பக்குவப்படுத்தல் ஸாத்தியப்படமாட்

* Read at the Madura and Ramnad Districts Theosophical Conference held at Periyakulam.

டாறு. இக்காரணம் பற்றியே ஒரோர் காலத்தில் ஏற்பட்டுள்ள ஜீவகோடிகளுக்கு மேற்கண்டபடி உதவியை அளிக்கவேண்டியதற்காகவே ஈசுவரனுக்குப் பிரதிநிதிகளாகத், தேவர்களும் மஹரிஷிகளும், அவதரிக்க சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்பதாக எல்லா மதக்கிரந்தங்களாலும் நாம் அறிவோம். இந்த மாதிரியாக அக்காலங்கள் மன்வந்தரங்களென்று சொல்லப்படுகின்றன. பிரதி மன்வந்தரத்திற்கும், அக்காலத்திய ஜனங்களுக்கு உதவிசெய்யவேண்டியதற்காக முக்கியமாய் ஒரு மனுவும் ஒரு தேவகுருவும் பொறுப்பை வகிக்கிறார்கள். இவர்கள் ஜீவன் முக்தியை அடைந்த ரிஷிகளே. ஒரு காலத்திய ஜீவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் மனுவும் தேவகுருவும் வேறு காலத்தில் வேறுவித யோக்கியதையுடைய ஜீவர்களுக்கு மனுவாகவும் தேவகுருவாகவும் அமையமாட்டார்கள். அவர்களுக்கு வேறு மனுவும் வேறு தேவகுருவும் ஏற்படுவார்கள்.

நாம் ஏழுவித அம்சங்களுடன் கூடினவர்களாயிருக்கிறோம். பிரதி அம்சமும் விருத்தியடையவேண்டியதற்காக 7 மனுக்கள் ஏற்படுகிறார்கள். ஏழுவித அம்சங்களாவன :—

(1) எவ்வாறு பாத்திரங்கள் வார்ப்பதற்குமுன் கருக்கட்டப்படுகிறதோ, அவ்வாறு ஸ்தூல சரீரம் அமைவதற்கு முன்னர் அதன் அச்சாக ஏற்பட்டுள்ள சாயா சரீரம். (2) ஸ்தூலசரீரம் (3) பிராணமயகோசம் (4) புவர்லோக சம்பந்தமான காமம் பற்றிய அதாவது அசுத்தமனோமயகோசம் (5) சுத்தமனோமயகோசம் அல்லது விஞ்ஞானமயகோசம் (6) ஆனந்தமயகோசம் இதுவே அஹங்காரகோசமென்றும் சொல்லப்பெறும். பலகிரந்தங்களில் இவைகளுக்குப் பல நாமங்களிடப்பட்டிருக்கிறபடியால், கருத்தைத் தெளிவாய்த் தெரிந்துகொண்டால் சந்தேகத்திற்கு இடமிராது. வேறொரு மாதிரியான ஏழு அம்சங்கள் இருப்பதாகவும் தெரிந்துகொள்ளலாம். பஞ்சேந்திரியங்களும் மனத்தினிடத்து அடங்கியிருப்பதாக விளங்கும். மனோவிருத்தியே இந்தவித இந்திரியங்களுடைய சேர்க்கை. மனத்தினிடத்து பஞ்சேந்திரியங்களும் ஏக காலத்தில் பக்குவப்பட்டுச் சேர்ந்து நிற்பதில்லை என்று நன்கு விளங்கும். ஒரோர் காலத்தில் ஒரோர் இந்திரியம் தான் பக்குவமாகிறது. பஞ்சேந்திரியங்கள் முழுமையும் பக்குவமானபிறகே மனத்தின் பக்குவம் ஏற்படுவதாகும் ஆகையால் மனத்தில் அடங்கியிருக்கும் இந்திரியங்களுடைய அம்சங்கள் 5. இவைகளுடன் புத்தி அஹங்கார தத்துவம் இவ்விரண்டையும் சேர்க்க ஏழு அம்சங்களாகின்றன. அதாவது சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தம் இவைகள் ஒரோர் காலத்திலும், புத்தி ஓர்காலத்திலும் அகங்காரதத்துவம் ஓர்காலத்திலும் பரிபக்குவமாகும். ஆகையால் ஜீவர்கள் ஏழுவித வர்க்கங்களின்

வழியாய்ப் பரிபக்குவத்தை அடையவேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு பெரிய வர்க்கத்திலும் ஏழு உள்வர்க்கங்கள் உண்டு. அந்த உள்வர்க்கங்கள் ஏழிலுள்ளும் ஏழு பெரிய வர்க்கங்களினுடைய குணங்களும் முறையே கொஞ்சம் சேஷித்திருக்கும். இவ்வாறு ஜீவர்களுடைய பரிபக்குவங்களின் கதி நடைபெறுகிறது.

4. ஒரு பெரிய வர்க்கத்தின் மனு, தான் எந்த வர்க்கத்திற்கு மனுவோ அதற்கு முந்திய மனுவின் வர்க்கத்தில் தமக்குரித்தான உள்வகுப்பினின்றே ஜீவர்களைத் தெரிந்தெடுத்து உதவி புரிவார். அதாவது முதல் மனுவிற்கு ஏற்பட்டுள்ள ஜீவவர்க்கங்களில் இரண்டாவது உள்வகுப்பினின்று அடுத்த இரண்டாவது மனுவானவர் தமக்கு வேண்டிய ஜீவர்களைத் தெரிந்தெடுப்பார். இவ்வாறே 2-வது மனுவின் 3-வது உள்வகுப்பு ஜீவர்களிடமிருந்து அடுத்த 3-வது மனுவானவர் தமக்கு வேண்டிய ஜீவர்களைத் தெரிந்தெடுப்பார். இம்முறையை வைத்துக்கொண்டு மற்றவர்கள் எவ்வாறு தெரிந்தெடுப்பார்களென்பதை நாம் சுலபமாய்த் தெரிந்துகொள்ளக்கூடும். இப்பொழுது வெகுகாலஞ்சென்றுவிட்டபடியால் பூர்வீகத்தில் தத்துவங்கள் வெளிவந்த முறையைக் கிரஹிப்பது கஷ்டந்தான். இவைகளெல்லாம் நமது புராணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவைகளைச் சிரமப்பட்டு ஆராய்ந்து பார்த்தால் தெரியவரும். மஹான்கள் தாங்கள் சூக்ஷ்மதர்சநத்தில் கண்டறிந்த சில விஷயங்களை ஸ்தூலவாசகத்தில் சாத்தியப்பட்டமட்டில் விவரித்திருக்கிறார்கள். என்ன பிரயத்தனம் செய்தாலும் ஸ்தூலவாசகத்தில் சூக்ஷ்ம தத்துவத்தைச் சொல்லுவதில் குறைவுபடும் தான். அப்போது நாமும் ஸ்தூலவாசகத்தோடு நில்லாது அந்த ஸ்தூலவாசகத்தை ஒரு சாதகமாக வைத்துக்கொண்டு தத்துவாராகத் தியானித்தால் மஹான்களின் உட்கருத்தைஎட்டிப்பிடிப்போம், யதார்த்தம் விளங்கும். ஸ்தூலவாசகத்தோடு மாத்திரம் நிற்பவர்களுக்குத் தத்துவம் விளங்காது. ஸ்தூலமாகப்பார்த்த விஷயத்தையே உள்ளபடி வர்ணிப்பதென்றால் சாத்தியப்படாமலிருக்கிறது என்பதை அறிவோம். சூக்ஷ்மமாகக் கண்டறிந்தவிஷயங்களை வர்ணித்தல் சாத்தியமன்று. ஆகையால்தான் பெரியோர்கள் கிரந்தங்களின் கருத்தை அறியவேண்டுமானால் சிரவணம், மநநம், நிதித்தியாஸநம் செய்யவேண்டுமென்பதாக வற்புறுத்தியிருக்கிறார்கள்.

5. முதல் மனு சாயாசரீரத்திற்கும், 2-வது மனு ஸ்தூலசரீரத்திற்கும், உதவி புரிந்துவந்ததாக வைத்துக்கொள்வோம். காலஞ்சென்றுவிட்டபடியால் இந்த 2 மனுக்களின் கார்ய நிர்வாஹங்களைப் பற்றி ஸ்பஷ்டமாய் அறிவது கஷ்டந்தான். 3-வது மனு முதல் நாம் ஒருவாறு சுலபமாய்த்

தெரிந்துகொள்ளலாம். 3-வது மநுவானவர் தமக்கு ஏற்பட்டுள்ள ஜீவர்களுக்கு உண்டான பிராணமய கோசத்தைப் பக்குவப்படுத்துவதற்கு வேண்டிய உதவிகளைப் புரிந்துவந்தார். மேற்குறித்த ஜீவர்களே நமது புராணங்களில் கூறப்படும் அசுரர்கள். மூன்றாவதாகிய அசுரவர்க்கத்தின் மனுவின் காலத்தில் அடுத்தவர்க்கத்தின் மனு சென்று அந்த அசுர வர்க்கத்தில் 4-வது உள்வகுப்பினின்று தமக்கு வேண்டிய பிரஜைகளைத் தெரிந்தெடுத்தார். பின்னர் பாக்கியிருந்த அசுரர்களுக்கும் அவர் இருந்த பிரதேசத்திற்கும் அநேக விபத்துக்களும் கஷ்டங்களும் ஏற்பட்டன. ஸம்ஹாரத்தினுடைய வழிகளுக்கு முடிவில்லை. ஜீவர்கள் மேலான ஸ்திதிக்கு ஏறவேண்டுமென்ற கருத்துடனே அவர்களுடைய கெட்ட சரீரங்களைப் போக்கவேண்டிச் செய்யும் உபாயங்களே ஸம்ஹாரத்தின் முக்கிய கருத்தாம். மேற்குறித்தவாறு நாலாவது வர்க்கத்தின் மனுவால் அசுரவர்க்கத்தின் 4-வது உள்வகுப்பினின்று தெரிந்தெடுக்கப்பட்டவர்களே நமது புராணங்களில் கூறப்படும் ராக்ஷதர்களானவர்கள். இவர்களுக்குப் புவர்லோக சம்பந்தமான காம மானஸிக சரீரம் பலப்படவேண்டும். இனி ஒரு வழியில் பார்க்கில் இவர்களுக்குக் கிராணேந்திரியம் (மூக்கு) பிரபலமில்லை. இப்படிப்பட்டவர்கள் இன்னும் சில தேசங்களில் இருந்தே வருகிறார்கள். பர்மாக்காரர்களுக்கும் சீனர்களுக்கும் இன்னும் கிராணேந்திரியம் பக்குவமாகவேயில்லை. எதையும் புதிதாகப் புசியார்கள். நன்றாய் அழுகப்போட்டுப் புழுத்துப்போய்த் துர்க்கந்தம் உண்டானால்தான் அவர்களுக்குப் பிரியமாயிருக்கும். ஏனெனில் கிராணேந்திரியம் பிரபலப்படாத காரணத்தைவிட்டு அவர்களுக்கு அருவருப்பு கிஞ்சித்தேனுமில்லை. தற்காலம் வெகு தூரத்திற்கு அப்பால் அழுகிப்போன வஸ்துக்கள் இருக்குமாகில் நமக்கு எவ்வளவு அருவருப்பை உண்டாக்குகின்றன வென்பதையும், அவ்வித அழுகிப்போன வஸ்துக்களை வண்டியிலேற்றிக் கொண்டு அதிலேயே அருவருப்பன்றியில் சுகமாய் உட்கார்ந்து சாப்பாடு முதலியவைகளை முடித்துப் பிரயாணம் செய்யும் மனிதர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

6. மேற்சொல்லிய ராக்ஷதர்களுக்காக ஏற்பட்டுள்ள மனுவின்காலத்திலேயே அடுத்த 5-வது வர்க்கத்தாருக்காக ஏற்பட்டுள்ள மனு சென்று தமக்கு வேண்டிய பிரஜைகளை ராக்ஷதர்களின் 5-வது உள்வர்க்கத்தினின்று தெரிந்தெடுத்தார். அவரே பிரகிருதத்திலுள்ள வைவஸ்வதமனு. இவர் மனத்தின் தர்மத்தைப் பிரபலப்படுத்தவேண்டியவர். இவர் தெரிந்தெடுத்த பிரஜைகளுக்கே ஆரியர்களென்று பெயர். ஆரியர்களுக்குத்தான் கிராணேந்திரியம் பிரபலப்படும். பஞ்சேந்திரியங்களும் பூர்த்தியாகப் பக்குவமானால் மனமும் பிரபலப்பட்டதாகும். ஆரியர்களுக்காக ஏற்பட்டு கிற்கும் நமது வைவஸ்வத

மனுவானவர் முந்திய ராக்ஷதர்களுடைய மனுவின் காலத்திற் சென்ற முன் பிரஸ்தாபித்தவண்ணம் அவ்வகுப்பின் 5-வது உள்வகுப்பினின்று தமக்கு வேண்டிய பிரஜைகளைத் தெரிந்தெடுக்கும்பொழுது அந்த மனுவும் இவருக்கு வேண்டிய சகாயங்களையும் செய்ததாகத் தெரியவருகிறது. வைவஸ்வத மனு தமக்கு வேண்டிய பிரஜைகளைத் தெரிந்தெடுக்கும்பொழுது, எல்லோரும் இவருக்குப் பிரஜைகளாக அமையவில்லை. யாவர் ஜ்ஞானேந்திரியம் (நாக்கு) அதிகமாகப் பிரபலப்படாமலும், கிராணேந்திரியம் பக்குவமாகக் கூடிய குறி குணங்களோடும் இருக்கிறார்களோ அல்லது புவர்லோக சம்பந்தமான சரீரம் சாதாரணமாய் இருந்தும் சுத்த மனத்தைப் பிரபலப்படுத்திக்கொள்ளக்கூடிய குறி குணங்களை யுடையவர்கள் எவர்களோ, அவர்களே இந்த மனுவிற்கு ஈடேடுவோர்களேயொழிய மற்றவர்கள் வாரார்கள். அவர்களைப் பலாத்காரமாய்ச் சேரச்செய்யவும் முடியாது, செய்யப்படவுமாட்டார்கள்.

7. வைவஸ்வத மனுவானவர் தனக்குக் கிடைத்த பிரஜைகளைப் பல இடங்களில் பிரத்தியேகப்படுத்தி வைத்திருந்து கடைசியாக, ஓர் ஸ்தலத்தில் கொண்டுவந்து சேர்த்து அங்கு அவர்களைப் பக்குவஞ் செய்துவந்தார் நல்வழியில் நடத்திவந்தார். ராக்ஷதர்களினின்று ஆரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டபின்னர், மிருந்த ராக்ஷதர்களிருந்த கண்டத்திற்கு ஆங்கிலத்தில் Atlantean Continent என்று பெயர். அதின் அடியிடம் இப்பொழுதுள்ள அட்லாண்டிக் மஹாசமுத்திரம்தான். கடைசியாக வைவஸ்வத மனுவானவர் தனது பிரஜைகளைக் கொண்டுவந்துசேர்த்துப் பக்குவப்படுத்திய ஸ்தலத்திற்கு இப்பொழுது கோபி பாலைவன (Gobi) மென்று பெயர். இப்பாலைவனம் பல்லாயிரம் மயில் அகல நீளமுடையது. பூர்வம் சமுத்திரமாக இருந்தது. சமுத்திரத்தை அடுத்து கடற்றுறைப்பட்டணங்கள் இருந்தன. இப்போது சோதனையில், அப்பாலைவனத்தில் சில கட்டிடங்களுடைய சின்னங்களும் கிடக்கின்றன. ஆரியர்கள் கடைசியாகக் குடியேறியவிடம் ஆரியவர்த்தம். இது ஹிமயமலைக்கும் விந்தியமலைக்கும் மத்தியிலுள்ளபிரதேசம். இந்த 2 மலைகளும் பூர்வம் காம் இப்பொழுது பார்க்கிறபடி இல்லை. ஹிமயமலை மிகத் தணிந்ததாயும் விந்தியமலை அதிக உன்னதமாயும் இருந்ததாகத்தெரியவருகிறது. இந்த தத்துவத்தைத்தான் நமது புராணங்களில் அகஸ்தியர் தெற்கேபொதிகைமலைக்குப் போனதாயும் விந்தியமலை அதிக உன்னதமாயிருந்த தென்றும் அதைத் தாண்டிச் செல்ல இடங்கொடாதிருந்ததினால் விந்தியமலையைக்கொஞ்சம் குனியும்படி அவர்ஆக்ஞாபித்ததாகவும் அது உடனே தணிந்ததாகவும் மீளவும் முனிவர் தான் பொதிகையினின்று திரும்பி வருமளவும் அவ்விதம் தணிந்தே இருக்கும்படிக்கு அவர்

உத்தரவு கொடுத்துச் சென்றதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அதானது விந்தியமலை பின்பு தணிந்ததும் ஹிமயமலை உன்னதமானதுமான உண்மையைத் தெரிவிக்கிறது.

8. மேற்கூறியவண்ணம் வைவஸ்வதமனுவின் ஆதிபத்தியத்தின்கீழ் தற்காலத்திலுள்ள ஆரியவர்க்கம் பிரபலப்பட்டுவருகின்றது. ஒவ்வொரு மனுவோடும் கூட ஒரு தேவ குருவும் இருந்துகொண்டு உதவிகளைப்புரிந்து வருகிறாரென்ற விஷயத்தையும் மறந்துவிடப்படாது. ஐந்து உள்வகுப்புக்கள் வரையில் விருத்தியாகிப் புறப்பட்டுவந்திருக்கின்றன. அதாவது ஆரியர்களுடைய மனது பிரபலத்தை அடைந்திருக்கின்றது. இங்கு பிரஸ்தாபிக்கும் மனதானது விஷயாதிகளுடன் சம்பந்தப்பட்ட மனமாம் (Connected mind) ஆரியவர்க்கத்தில் முதல் உள்வகுப்பு இந்திய ஆரியர்களும், 2-வது உள்வகுப்பான ஆரிபோஸெமிடிக் வகுப்பினர்களும், 3-வது உள்வகுப்பான ஐரேனியர்களாகிய ஆதியில்பார்ஸிகத்திலிருந்தவர்களும்* 4-வது உள்வகுப்பான கேல்டிக் ஜாதியரும் 5-வது உள்வகுப்பான டியூடானிக் ஜாதியர்களுமாம். டியூடானிக் ஜாதியார்களுள், ஆங்கிலர், ஜர்மானியர் முதலிய வகுப்பினர்கள் அடங்குவார்கள். இவர்களுடைய மனதானது பலவிதத்திலும் பிரபலத்தை அடைந்திருக்கின்றது. உலகசம்பந்தமாக எவ்வளவோ விஷயங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகாச விமானங்கூட வந்துவிட்டன. இன்னும் தந்திக்கம்பி தந்திமரம் இல்லாமல், சமாசாரம் பேசும் உபாயத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். இவர்களால் எண்ணிறந்த உலக சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் எவ்வளவோ ஏற்படவும் போகின்றன. இது வரைக்கும் பிரஸ்தாபித்த விஷயங்கள் சென்ற விஷயங்கள். இனி தற்காலம் நிகழப் போகும் விஷயங்களை இனி விசாரிப்போம்.

9. தேசமெங்கும் சென்ற 35வருஷங்களாக தியஸாபிகல் ஸொஸைடி என்ற பிரஹ்மஞான சங்கத்தின் கிளைச்சங்கங்கள் பரவி வேலைசெய்து வருகின்றன. இது ஆதியில் மாதா ஸ்ரீ H. P. பிளாவாட்ஸ்கி அம்மை அவர்களாலும் ஸ்ரீமான் கர்னல் ஆல்காட்துரை அவர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது. சிலர் இதைப் புதுச் சங்கம் என்றும் நினைக்கலாம். மேற்படி சங்கத்தினுடைய பெயர் புதிதாகச் சொல்லலாமேயொழிய சங்கம் புதிதானதன்று. இச்சங்கத்திற்கே பல ஜன்மங்களுண்டு. ஆகலால் பல பெயர்கள் கிடைத்திருக்கின்றன. இந்த ஜன்மத்தில் அவ்விதம் பெயரை அடைந்தி

* இவ்வகுப்பினரின் சின்னம் இப்போது பம்பாய் ராஜதானியில் இருக்கும் பார்ஸீக்களாவார்.

ருக்கிறது. பெயர் மாறக்கூடியதுதான். இனி அடுத்துவரும் ஜன்மங்களில் வேறு பெயர்களை அடையும். நாம் சரீரமல்ல. சரீரத்தினிடமாகக் குடியிருக்கும் ஜீவாத்மா சரீரியே. சரீரிக்கு நாசம் கிஞ்சித்தேனுமில்லை. அவ்விதசரீரியே பூர்வஜன்மங்களில் பல இடங்களில் பல ஜாதிகளில் பல பெயர்களாலே விளங்கினேம். இந்த ஜன்மத்தில் ஒரிடத்தில் ஓர் ஜாதியில் ஒருவித நாமம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இனி எத்தனை இடங்களில் எத்தனை ஜாதிகளில் என்ன என்ன பெயர்களெல்லாம் எடுக்கவேண்டியிருக்குமோ அறிகிலோம். அதுபோலவேதான் சங்கமும். அனுவசியமாகப் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் முகத்தைச் சுளிக்கவேண்டாம். ஸாராம்சத்தைக் கிரஹிப்பது தான் விவேகிகளின் லக்ஷணம். முன்குறித்த அம்மையும் துரையும் நிர்நிமித்தமாகச் சங்கத்தை ஸ்தாபிக்க வரவில்லை. முக்கியமாய் ஹிமாசலவாஸிகளாகிய இரண்டு மஹாரிஷிகளாலே அவர்கள் அனுப்பப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. மஹாரிஷிகளுக்கு இவர்கள்தானா அகப்பட்டார்களென்று எண்ணப்படாது. ஈசுவரனுக்காகட்டும் மஹாரிஷிகளுக்காகட்டும் எல்லா ஜீவகோடிகளிடத்தும் ஸமபுத்தியே. தாங்கள் எண்ணிய காரியம் எவரால் முடியுமோ அவரை முன்னிட்டு அக்காரியத்தை முடிப்பார்கள். சிற்றறிவுள்ள நமக்கு அதின் மர்மம் புலப்படமாட்டாது. அவ்விரண்டு மஹாரிஷிகளும் யார் என்பதாகச் சில நுட்பஅறிவுடையவர்கள் நம்முடைய புராணங்களைச் சோதித்துப் பார்த்தபொழுது இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த மருவும், சந்திரவம்சத்தைச்சேர்ந்தசந்தனுவின்தமையனும்பீஷ்மாசார்யருடைய பெரியதகப்பனுமான தேவாபியும்ஆக இவ்விருவர்கள்தான் இம்மஹாரிஷிகள் எனத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இன்னும் ஸ்தூல சரீரத்தோடு கலாபத்தில் இருந்துகொண்டு இச்சகத்திற்குரிய காரியங்களையும் நடத்திவருகிறார்கள். அவர்கள் மேற்குறித்த காரியங்களில் ஈடுபட்டிருப்பதற்கு முக்கிய காரணம் உண்டு. அதாவது மேற்குறித்த சூரியவம்சத்தினரான மருவென்பவர் அடுத்த 6-வது மனுஷவர்க்கத்திற்கு மனுவாகவும் அவருடன்கூட தேவாபி என்ற மஹான் தேவ குருவாகவும் வரவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

10. 6-வது வர்க்கத்தில் புத்திதத்துவம் பிரபலப்படவேண்டுமென்பதாக ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கிறேன். மனத்தைப் பிரபலப்படுத்தவேண்டியது வைவஸ்வதமனுவின் வேலை. வரப்போகிற 6-வது வர்க்கத்தின் மனுவிற்கு புத்தியைப் பிரபலப்படுத்தவேண்டிய வேலை. எவ்வாறு நமது தற்கால மனுவானவர் பூர்வம் ராக்ஷதர்களின் மனுவின்காலத்தில் சென்று தனக்கு வேண்டிய பிரஜைகளைத் தெரிந்தெடுத்தாரோ, அவ்வாறே நமது மனுவின்காலத்திலேயே அடுத்த மனுவின்வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கி

றது. அநேகமான தனக்குரிய பிரஜைகளைத் தெரிந்தெடுப்பதற்காக வேண்டித் தங்கள் ஆப்த சிஷ்யர்களை அனுப்பிப் பல இடங்களில் சங்கங்களை ஸ்தாபித்து அவர்கள் மூலமாகத் தங்கள் நோக்கங்களையும் மனிதகோடிகளுக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இக்கலியில் இச்சங்கத்தினுல் எவ்வளவோ காரியங்கள் சுலபமாய் நடக்கக்கூடியதாக இருக்கிறது. இப்போது ஜகத்தில் நல்லகாரியமாகட்டும் கெட்டகாரியமாகட்டும் சங்கமன்றியில் பிரபலப்படுவதேயில்லை என்பது எல்லோரும் கண்டறிந்திருக்கும் விஷயம். சங்கம்சேர்ந்து கூப்பாடு போடவேண்டியதுதான். அதற்கினமாயுள்ளதெல்லாம் வந்து சேர்ந்துகொள்ளும். மற்றவைகள் சேரமாட்டா. சில வந்துசேர்ந்து உபத்திரவப்படுத்துவதுமுண்டு. இனி சத்தமானுல் தான் பக்கத்திலிருக்கிற இனங்கள் இனத்தோடுவந்து சேருமே. சத்தமாமல் மறைவாயிருக்கின் எவ்வாறு வந்துசேரும்? இனமில்லாதது வந்துசேராது, இதற்கு வைரியானஜாதி அறிந்தால் அந்த இடத்திற்கு வந்துசேர்ந்து உபத்திரவப்படுத்தும். மஹா விவேகிகளான மஹான்களோ சும்மாயிரார்கள். நடக்கிறது நடக்கட்டுமென்றே நோக்கங்களைச் சங்கங்களின் மூலமாய்ப் பரவச்செய்து வருகிறார்கள்.

11. மேற்படி மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட சங்கத்தின் நோக்கங்கள் மூன்றேயாம். அவையாவன:—

1. தேசம், பால், வர்ணம், மதம் இவை முதலிய வேற்றுமைகளினுல் துவேஷபுத்தியை விட்டொழித்து ஜனசமூகத்தில் ஸகோதரபாவத்தையும் அன்பையும் அன்னியோன்னியத்தையும் அபிவிர்த்தி செய்தல்.

2. பற்பலமதங்களின் சாஸ்திரங்களையும் அவைகளின் கொள்கைகளையும் ஒப்புநோக்கி ஆராய்தல்.

3. இதுவரை வெளிவராத பிரகிருதித்துவங்களைப் பரிசோதித்தல், ஒவ்வொரு மனிதனிடமும் சுரூபமாய் அமைந்திருக்கும் சக்திகளை அப்பியாசங்கள் வழியாய் அபிவிர்த்தி செய்தல் முதலியனவாம்.

மேற்சொல்லிய முதல் நோக்கத்தைச் சிலர் தப்பாகக் கிரகிக்கிறார்கள். அவர்கள் கிரகிக்கிறபடி, இப்பொழுதே ஒரே ஜாதியாய் ஆய்விடுகிறதும், எல்லோரும்சேர்ந்து உண்பதும், ஒருவர்க்கொருவர் விவாகசம்பந்தத்தை வைத்துக்கொள்வதும் என்பதாம். இது சரியானதல்ல. அவ்வாறு நினைப்பது விசாரணையின் குறைவே. ஒருகுடும்பத்தில் 10 பெயர்கள் சகோதரர் முதலியவர்களிருந்தால் அவர்களில் வயதிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும் வித்தியாசமிருப்பினும், எவ்வாறு ஸகோதர பாவத்திற்கு விரோதமின்றியில் அவர்

களுள் அன்பும் அன்னியோன்னியமும் எற்பட்டிருக்கிறதோ, அதுபோலவே உலகமாகிற பெரிய குடும்பத்தில் ஈசுவரனுக்கு நாம் குழந்தைகளானபடியினாலே அவரவர்களுடைய மனோபக்குவத்திற்குத் தக்கபடி பல மதங்களும் அவைகளை அனுசரித்த ஆசாரங்களும் எற்பட்டிருக்கின்றன நாம் எல்லோரும் ஸகோதரபாவத்திற்கு விரோதமன்றியில் அன்பையும் அன்னியோன்னியத்தையும் விருத்திசெய்தல்வேண்டும். சங்கத்தார் சொல்லும் ஸகோதரபாவம் பிரகிருதிசம்பந்தமான சரீரத்தைப் பொறுத்ததல்ல. ஆத்மபாவத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. அதாவது பகவத் கீதையில் சொல்லியவண்ணம்.

ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஶ்வரம் ।
விநஶ்யத்ஸ்வவிநஶ்யந்தம் ய꞉ பஶ்யதி ஸ பஶ்யதி ॥

நாசமடைகிற சகல பூதங்களிலேயும் நாசமின்றி சமமாயிருக்கிற பரமேசுவரனை எவன் அறிகிறானோ அவனே அறிந்தவன், மற்றவன் அறியாமூடன்.

ஸமம் பஶ்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ்தி²தமீஶ்வரம் ।
ந ஹிநஸ்த்யாத்மநாத்மாநம் ததோ யாதி பராம் க³திம் ॥

ஸகல பிராணிகளிடத்தும் சமமாயும், நாசமற்ற ஸ்வரூபியாயுமிருக்கிற ஈசுவரனையறிந்தவன் தன்னாலே தன்னைக் கெடுத்துக்கொள்கிறதில்லை, பிறகு மோக்ஷத்தை அடைகிறான். (மற்றவன் தானே தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்கிறான்.) மேலும் கீதையில் சொல்லியவண்ணம்

ப³ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்³யதே ।
வாஸுதே³வ꞉ ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது³ர்லப⁴꞉ ॥

எத்தனையோ ஜன்மங்களெடுத்தபின் ஸர்வமும் வாசுதேவஸ்வரூபமென்ற ஞானம் அடைந்து என்னை பஜிக்கிறான், அப்படிப்பட்டவன் கிடைப்பது அரிது. இவ்விதமன்றியில் ஸ்தூலமாகச்சேர்ந்து உண்பதும் விவாஹசம்பந்தத்தை வைத்துக்கொள்வதுமாயுள்ள ஜாதியர்கள் விரோதபாவமன்றியில் இருக்கிறார்களா? இல்லையே! சேர்ந்து உண்ணும்பொழுதே மனத்தின்கண் எவ்வளவோ துவேஷத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆத்மபாவமே முக்கிய பாவம். அவ்விதபாவம் சரியாய் எற்பட்டாலன்றி அன்புமுதலிய ஸத்குணங்கள் எற்படமாட்டா.

12. பாக்கி இரண்டு நோக்கங்களை விவரிக்கப் புகுந்தால் விரியுமென்றஞ்சி விவரிக்காது நிறுத்திவிடுகிறேன். சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து

முதல் நோக்கத்திற்கு பாக்கி இரண்டும் சஹகாரிகளே. மானவிகமாய் ஒத்துக்கொள்ளும் சகோதரபாவத்தை 2-வது நோக்கமாகிற சாஸ்திர விசாரணை உறுதிசெய்யும். 3-வது நோக்கமாகிற அப்பியாசத்தினால் அனுபவத்திற்கும் கொண்டுவருவதாகும். அனுபவம் வராதவிஷயம் பிரயோஜனமில்லை. ஆகையால் அனுபவத்திற்கு முயற்சிக்கவேண்டுவது முக்கியமாம்.

13. தற்காலமோ ஆங்காங்கு ஆரியவர்க்கத்தில் 6-வது உள்வகுப்பினர்கள் தோன்றிக்கொண்டு வருகின்றார்கள். அவர்களினின்றுதான் அடுத்த 6-வது பெரிய வர்க்கத்தினர் தெரிந்தெடுக்கப்படவேண்டும். சங்கத்தின் முதல்நோக்கம் 5-வது வர்க்கத்தின் 6-வதுஉள்வகுப்பில் 6-வதுவர்க்கத்தின் சின்னங்கள் பிரபலப்படாவிடினும் வித்துரூபமாயாவது இருந்துகொண்டிருக்கும். அவ்வித்து அமைந்தவர்களை அதினின்று அடுத்த மனு தமக்கு வேண்டிய பிரஜைகளைப் பொறுக்கி எடுத்து, வித்துரூபமாயிருக்கும் அம்சத்தைப் பிரபலப்படுத்திவிடுவார். அதற்காக நம் மனுவும் அடுத்த மனுவிற்கு வேண்டிய சஹாயத்தையும் செய்துகொண்டிருக்கிறார். அடுத்த மனு வரப்போகும் சத்திய யுகத்திற்கே ஆகையால் அடுத்துவரும் ஸத்திய யுகத்தின் குணங்கள் யாரிடம் வித்து ரூபமாயாவது அமைந்திருக்கின்றனவோ அவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். நமது கிரந்தங்களில் கூறியவண்ணம் ஒரு குடும்பத்தில் மூன்றுவித தாரதம்மியங்கள் இருக்கின்றன. அவையாவன:- பெரியோர்கள், ஸமானர்கள், சிறியோர்கள் என்ற தாரதம்மியங்களே. அதுபோலவே ஜகத்தாகிற பெரிய குடும்பத்திலும் 3-வித தாரதம்மியங்கள் ஸ்வபாவத்திலேயே உள்ளன. இவ்வித நிலைமையில் பெரியோர்களிடம் அசூயையும் சமானர்களிடம் பொறாமையும் சிறியோர்களிடம் நிந்தனையும் காட்டி வருவது கலியின் தர்மமாம். கலிகாலமோ மிகக் கொடுமையுள்ளது. கலியின் கொடுமையைவிட்டு விலகி ஸத்திய யுக தர்மத்திற்கு நம்மைப் பாத்திரர்களாய்ச் செய்துகொள்ளவேண்டுமானால் இக்கலியிலேயே பக்தியையும் ஒற்றுமையையும் தானத்தையும் அனுஷ்டித்து அசூயை, பொறாமை, பிறரை நிந்தித்தல் இவைகளைக் கட்டோடே விட்டொழிக்கவேண்டும். அதாவது பெரியோர்கள் என்ற தலைப்பின் கீழ் ஈசுவரன் முதல் நம்மைவிட அறிவில் முதிர்ந்தவர்கள் பல படிகளில் இருக்கிறார்களென்பதை உணர வேண்டும். அவர்களிடம் அசூயை விட்டொழித்து பயபக்தி விசுவாசத்தைப் பாராட்டவேண்டும். ஸமானர்களிடம் பொறாமைகொள்ளாமல் அகற்ற வேண்டும். ஒற்றுமையாகச் சேர்ந்திருந்து பொதுவான காரியங்களை நடத்த வேண்டும். சிறியோர்களைத் திரஸ்கரிக்காது அதாவது அவர்களை நிந்தித்துக் கீழே தள்ளிவிடாமல் காருண்யத்துடன் தானமாகிறமேல் ஸ்திதிக்கு வரக்கூடிய உதவியைப்புரியவேண்டும். இவைகளே சத்திய யுக தர்மங்

களின் சின்னங்களாகும். ஆகையால் காலத்தை வீணில் கழிக்காமல் இப்பொழுதே மேற்கூறிய சத்திய யுக தர்மத்தைச் சாத்தியப்பட்டமட்டில் அனுஷ்டிக்கவேண்டும்.

14. "கலி 4 லட்சத்து 32ஆ வருஷம். அதில் 5009 வருடங்கள் தானே சென்றிருக்கின்றன. இன்னும் எவ்வளவோ லட்ச வருஷங்கள் பாக்கி இருக்கின்றனவே. இறைத்துத் தண்ணீரை வெள்ளமா கொண்டு போகப் போகிறது, என்று அநேகர் நினைக்கலாம். இது உண்மையல்ல. கலியிலோ வெகு பாகம் சென்றுவிட்டது. இந்த விஷயம் சிலருக்கு விந்தையாய்த் தோன்றும். விசாரியாததோஷம் அப்படித்தான் எண்ணச்செய்யும். வியாசர் விஷ்ணு ஸ்வரூபரென்பது உங்கள்எல்லோருக்கும்தெரிந்தவிஷயமே. அவர் அனுவசியமாக கிரந்தங்களில் ஒரு பதத்தை உபயோகியார். ஒரு பதத்தில் ரகசியமாக எவ்வளவோ கருத்தையும் அடக்கிவைக்கக் கூடியவர். அப்படிப்பட்ட (கிழத்தன்மையுடைய) மஹான் பாகவதத்தில் வார்த்தீகக் கலி பிரவேசித்தது என்று குறித்திருப்பதால் ஆழ்ந்து பார்ப்பவர்களுக்கு கலி வெகுபாகஞ் சென்றுவிட்டதாகப் புலப்படவில்லையா? அவ்வாறு சென்றது எவ்விதம் என்று சிலர் கேட்கலாம். அதற்குச் சுருக்கமாய் ஒரு சமாதானம் கண்டுபிடிப்போம். நாம் இரவில் தூங்கிவிழித்தால் உத்தேசமாக அனுபவத்தைக்கொண்டு இத்தனை மணி நேரம் தூங்கினேம் என்று சொல்லுகிறோம். ஒரு மனிதன் இன்று சனிக்கிழமை மாலை 3-மணிக்கு ஜன்னியால் பீடிக்கப்பட்டு பிரக்ஞாபங்கமாகிறான். 20 நாட்கள் கழித்து மாலை 4-மணிக்கு பிரக்ஞைக்கு மீளவும் வருகிறான். அவனுக்கு ஒரு மணி நேரம் பிரக்ஞாபங்கமாயிருந்ததாகத் தோன்றுமே யொழிய 20 நாட்களும் கழிந்ததாகத் தோன்றவே மாட்டாது. மேலும் இக்காலத்திலேயே சில விடங்களில் சில மஹான்கள் சமாதியில் வெகுகாலங்கள் இருக்கிறார்கள். சமாதி விட்டெழுந்ததும் அவர்களுக்கு அவ்வளவு நீண்ட காலம் நிமிஷங்களாகி விடுகின்றது. இதை மனத்தில் வைத்துக் கொள்வீர்களாகில் நான் இனி சொல்லப் போகும் விஷயம் நன்கு விளங்கும். கலியின் கொடுமையை உள்ளவாறறிந்த பகவான் கலியில் தன்னுடைய குழந்தைகளாகிற ஜீவர்கள் விசேஷ உபத்திரவப்படுவார்களென்பதை உணர்ந்து கருணை கூர்ந்து நாம் எவ்விதம் நமது குழந்தைகளுக்கு விசேஷ உபத்திரவம் இருக்கின்றதை மயக்கி அதற்குத் தோன்றாமல் உபத்திரவத்தை நீக்க முயற்சிக்கிறோமோ அதுபோலவே தான் விழித்திருந்தும் ஸகல ஜீவகோடிகளையும் சுஷுப்தி அவஸ்தையையடையும் படி செய்துவிட்டார். ராஸக்கிரீடையின் தத்துவமும் இதுவே. சுஷுப்தி அவஸ்தை விட்டெழுந்து ஜாக்கிராவஸ்தைக்குவந்ததுமுதல் எண்ணி வந்த வருடங்கள்தான் 5009 ஆகிறது. கலியின் கொடுமையை உத்தேசித்துத்

தான் பகவான் துவாபர அந்தியத்தில் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்ததின் நோக்கம். இல்லாவிடில் வியாசர் அனாவசியமான மேற்சொன்னபடி அப் பதம் பிரயோகம் செய்யார்.

15. ஆகையால் எனது பிரிய சகோதரர்களே! சகோதரிகளே! லோகத்திலுள்ள ஸகலஸமயத்தோர்களும் அவரவர்களிடத்திலுள்ள கிரந்தங்களின் தத்துவங்களை அறியாமலும் அதனால் சரியான அனுஷ்டானத்தைக் கைநழுவவிட்ட தோஷத்தாலும் இவ்வித க்ஷீண கதியை அடைந்திருக்கிறோம். இச்சமயத்தில் எந்த கோஷ்டியினின்று ஸகலமதங்களும் வந்தனவோ அந்த கோஷ்டியினின்றே சில மஹான்கள் ஏற்பட்டு மறந்த தத்துவங்களை மீளவும் காட்டி வருகிறார்கள். அந்த மஹான்களே பல அதிகாரிகளுக்கு ஏற்ப பல காலங்களில் பல மதங்களை அளித்துவந்தமை போல் இனியும் எல்லாமதங்களையும் சமரஸப் படுத்தும் ஒருமதத்தை ஸ்தாபிக்கப்போகின்றார்கள். இதற்கு கருங்குழி இராமலிங்க ஸ்வாமிகளே அத்தாக்ஷி. அதற்கு ஸமரஸமத மென்றும் ஒருவாறு சொல்லத்தகும். தற்காலம் ஏற்பட்டுள்ள மதங்களிலேயே அவர் அவர்கள் இருந்துகொண்டு இதரஸமயத்தோர்களிடம் துவேஷத்தை விட்டொழித்து சமபுத்தியை அனுஷ்டிப்பதே ஸமரஸமத மென்னப்படும். இக்காரணத்தைப்பற்றித்தான் மேற்குறித்த மஹான்களால் ஸ்தாபித்துள்ள பிரஹ்மஞான சங்கங்களில் பலமதஸ்தர்களும் சேர்கிறார்கள். ஆர்ய சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் இந்தியாவில் ஜனிக்கவில்லையா? நீங்கள் இந்திய புத்திரர்கள் அல்லவா? புத்திரிகள் அல்லவா? உங்களது ஜனன தேசம் பூர்வம் எப்படியிருந்தது, தற்காலம் எப்படி இருக்கிறது? நீங்களே உங்கள் பெரியோர்கள் மூலமாய்த் தெரிந்து யோசித்துப் பாருங்கள். இவ்வளவுக்கும் முக்கிய காரணம் துவேஷமல்லவா? துவேஷத்திற்குக் காரணம் அக்ஞானமல்லவா? இப்படித்தானா நாமும் நமது தேசமும் சீர்குலைந்திருக்க வேண்டும். இனியாவது முன்னுக்குவரும் வழியை நாடக்கூடாதா? மஹான் அளித்துவரும் ஞானத்தைக் கிரஹித்து, அக்ஞானத்தைத் தொலைத்துத் துவேஷ புத்தியை விட்டொழித்து ஸமரஸ புத்தியைக் கொள்ளக் கூடாதா? உங்களுடைய தேசத்தில் மாத்திரம் எத்தனையோ சாகைகளுள்ள பல மதஸ்தர்களும் தற்காலம் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் இத்தேசத்திற்கு அங்கத்தினர்களே. ஒருவரும் இத்தேசத்தை விட்டுப் போகார்கள். இவ்வித சந்தர்ப்பத்தில் சமபுத்தியை அனுஷ்டிப்பதை விடவேறு எவ்வித மார்க்கத்தால் நீங்கள் உங்களுடைய அன்னையாகிய இந்தியாவை உயர்பதவிக்குக்கொண்டுவரப்போகிறீர்கள்? இக்காலத்தில்இங்கு அக்கிராசனத்தை வகித்திருக்கும் நமது அன்பார்ந்த இந்த அன்னையார் நமது தேசத்திற்கு வாராவிடின் நமது ஹிந்து மதமே தொலைந்துபோயிருக்

ருமே! இது என் அபிப்பிராயம் மாத்திரமன்று. விவேகாநந்த சுவாமிகளின் அபிப்பிராயமும் அப்படியே. மேற்படி அன்னையாலும், அன்னைக்கு முந்தி சபையை நிர்வஹித்தவர்களாலும், மற்றோராலும் நமது தேசத்தில் காங்கிரெஸ் என்ன, கண்காக்ஷி யென்ன, ஹிந்து காலேஜென்ன இவ்வித சௌகரியங்களெல்லாம் ஏற்பட்டன. அதற்கு முந்தி நாம் எல்லோரும் யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்ட அஜங்களைப்போல் விழித்துக்கொண்டிருந்தோமே. நாம் 200 ஜன்மங்கள் எடுக்கினும் இந்த அன்னையும் இதரர்களும் நமக்குச் செய்திருக்கும் நன்மைகளினால் ஏற்பட்டிருக்கும் ருணங்களைத் தீர்க்க முடியாது. விஷயம் இப்படியிருக்க, நன்றியறிதலன்றியில் நிந்தனைசெய்பவர்கள் பெரும் பாப மூட்டையைக் கட்டவேண்டியதுதான். கலியில் நல்லவர்களை யறிவது மிகக்கஷ்டமே. இக்காலமோ நமக்கெல்லாம் நற்காலமென்று சொல்வலாம். சமீபத்தில் பல மஹான்களும் ஜகத் குருவும் அவதாரம் செய்யப்போகிறார்களென்பதாகவும், ஏற்கனவே அவதரித்திருக்கும் சில மஹான்களும் சமீபத்தில் ஜகத்திற்கு வந்து வேண்டிய உதவிகளை அளிக்கப்போவதாயும் தெரியவருகிறது. ஜகத்குரு அவதாரத்தில் ஒரு கஷ்ட மிருக்கிறது. ஜகத்தில் கோடானு கோடி ஜாதி பேதங்கள் இருக்க, எதில் ஜனிக்கிறதென்ற கஷ்டந்தான், ஒரு ஜாதியில் ஜனித்தல் மற்றொரு ஜாதிக்கு ஆகாது. இவ்வாறு நமக்குள் விசேஷ வேற்றுமை பாவம் இருக்குமளவும் ஜகத்குருவின் அவதாரம் தாமதிக்கவேண்டியதாகவே நேரிடும். அப்படிக்கன்றியில் சிலராவது வேற்றுமையை ஒழித்து எந்த ஜாதியில் வரினும் வரட்டும். நாம் அவரை அனுசரிக்கிறோமென்பதாகச் சித்தமாயிருந்தால் சீக்கிரம் அவதரிக்க ஹேது உண்டு. ஆரூர்த் தியாகேசர் நீசவேடம்பூண்டு திருவப்பர் மாசாணத்தில் ஸோமயாஜி செய்த யாகத்தில் அவிர்ப்பாகம் வாங்கச் சென்றார். எல்லோரும் அவரைக் கண்டுகொண்டார்களா? இல்லையே. ஸோமயாஜிமாற நாயனார் மாத்திரம் கண்டு அவிர்ப்பாகம் கொடுத்தார். கிருதார்த்தரானார். இத்தர்மம் எக்காலத்திலும் ஸஹஜமாய் ஏற்பட்டுள்ளதே. இதை உத்தேசித்து ஜகத்குரு அவதரிக்காமலா இருந்துவிடப் போகிறார்! அவதரித்துவிட்டாரென்று சொல்லக்கூட நியாயமிருக்கிறது. சில பெரிய சோதிட நிபுணர்கள் சென்ற ஜனவரி௴ 11௳ அமைந்திருக்கும் கிரஹங்களின் நிலையைக்கொண்டு அவ்வித நிலை எத்தனையோ ஆயிரம்வருஷங்களுக்கப்பால் அவ்வித அற்புத சேர்க்கை ஏற்படுகிற தென்றும் மேற்குறித்த தினத்தில் ஒரு பெரிய அவதாரமும் ஏற்பட்டே யிருக்கவேண்டு மென்றும் கணித்திருக்கிறார்கள். ஜகத்குரு வந்தால் அவரைப் போற்றி நீண்ட காலத்திற்கு வைத்திருந்து நமக்கு வேண்டிய நன்மைகளை அடைவதும் அல்லது அவரை உடனே திருநாட்டிற்கு அனுப்பிவிட்டு, தீமைகளை அனுபவிப்பதும்

நம்மைப் பொறுத்ததாயிருக்கிறது. பூர்வாசார்யர்கள் அக்ஞானிகளிடம் மாட்டிக்கொண்டு பட்ட கஷ்டங்களுக்குக் கணக்குண்டா? இக்காலத்திலோ நமக்கு மதசம்பந்தமான காரியங்கள் செய்துவைக்கும் புரோகிதர்களுக்கு ஞானம் விசேஷமில்லை. ஆகையால் கர்மாசார்யனைக் கொண்டு கர்மத்தை நடத்தவேண்டியதுதான். ஞானசார்யரிடம் ஞானத்தைக் கைக்கொள்ளவேண்டுவதுதான். இது பூர்வாசார்யர்களின் சம்மதமே. சம்பிரதாயமுமே. ஆகையால் ஸத்திய யுகத்திற்கு வேண்டிய பிரஜைகளைத் தெரிந்தெடுப்பதில் மஹான்களுடைய முயற்சிகளின் நோக்கங்களை நன்ருய்க் கிரஹித்து நாமெல்லோரும் அதில் அங்கத்தினர்களாய் அமையக்கூடியதாக பக்தி, ஒற்றுமை, தானம் என்ற குணங்களடங்கிய யதார்த்த சகோதரபாவத்தை அடையக்கூடிய ஞானத்தை ஜகதீசுவரன் நமக்குக் கொடுத்தருள் புரிவாராக.

ஓம் தத் ஸத்.

வி. ராமச்சந்திர நாயுடு.

## நன்மொழி.

---

102. சன்மார்க்கம், இன்பமார்க்கம் என மார்க்கம் இருவிதம். முன்னது, மோக்ஷ மார்க்கமென்றும், நிவிர்த்தி மார்க்கமென்றும் பெயர்பெறும். பின்னது உலகமார்க்கம் என்றும், பிரவிர்த்திமார்க்கமென்றும் வழங்கும். எல்லாச் சமயங்களும், அவைகளின் உபதேசங்களும் சன்மார்க்கமுறையை நோக்கியனவாம். இம்முறையின் பலனுன மோக்ஷம் அல்லது வீடு என்ற பேற்றை அடைய நான்கு சாதனங்கள் உள்ளன. 1. நித்தியாநித்திய வஸ்து விவேசனம், 2. வைராக்கியம், 3. ஷட்சம்பத்து, 4. முமுக்ஷுத்தவம்.

103. நித்தியாநித்திய வஸ்து விவேசனம். நித்தியமான வஸ்து இன்னது அநித்தியமான வஸ்து இன்னது என்று அறிதல் மாத்திரம் போதாது அவ்வுண்மையைஒவ்வொரு நிமிஷமும் உன்னனுஷ்டானத்தில் கவனித்து ஒழுகவேண்டும். ஞான முறை என்ருல், ஞான ஒழுக்கத்தினுல், மநதிற்கு ஸம்ஸ்காரம் அமையவேண்டும், மனம் தூய்மை பெறவேண்டும். சன்மார்க்கத்தின் முதலிலும் நடுவிலும் முடிவிலும், எப்போதும் இந்த உண்மை நம் சிந்தையில் இருத்தல்வேண்டும். எக்காரியம் செய்யப்புகினும், அதை அளக்கும் மாத்திரைக்கோல் இந்த விவேசனமேயாம். அது நன்மையானதா? தீமையானதா? அது நலம் தருமா? அல்லவா? சன்மார்க்கவழியில் உள்ளதா, அல்லது இல்லதா, என்று ஆராயவேண்டும்.

# புத்தக வரவு.

---

## 1. "அஞ்ஞாதவாஸம், அல்லது மாண்டவன் மீண்டமாயம்."

இது மகா-ள-ள-ஸ்ரீ ஆர். எஸ். நாராயணசாமி அய்யரவர்களியற்றிய ஓர் தமிழ் நாவல். இஃது எளிய தமிழ்நடையில் அழகாய் எழுதப்பட்டிருக்கிறது. இதின் கதையின் ருசியானது முதல்பக்கம் வாசிக்க ஆரம்பித்தவர் புத்தக முடிவுவரை கீழே வைக்காமல் வாசிக்கத் தூண்டுமியல்பினது. வக்கீல்களும், போலீஸ்தார்களும் இப்புத்தகத்தை நன்றாய் வாசிக்க வேண்டியது. "பண்டம் ஓரிடம், பழி பத்து இடம்" என்ற பழமொழி, இந்த நாவலில் வெகுபுத்தி சாதுர்யத்துடனே அமைக்கப்பட்டிருக்கிறது. இது துப்பறிகதைகளில் ஒருநல்லமாதிரியான அமைப்புள்ள கதை என்றுசொல்லலாம். விவேகபாநுப்பிரஸ்ஸில் நன்றாய்ப் பதிப்பிக்கப்பெற்றிருக்கிறது. இதன் விலை அணா 8 தான்.

## 2. "ஸ்ரீவான்மீகிராமாயண சருக்கார்த்த சங்கிரஹம்."

இதுவும் விவேகபாநு அச்சாபீசின் பதிப்பு. ஆதிகவி ஸ்ரீ வான்மீகி மஹரிஷியால் எழுதப்பெற்ற ஸ்ரீமத் வான்மீகி ராமாயணத்தின் ஸர்க்கங்களைத் தொகுத்து, ஒவ்வொரு ஸர்க்கத்தின் கதை முழுவதையும் சுருக்கமாய் ஒரோர் விருத்தப்பாவிலமைத்து அவ்விதம் 550பாசுரங்களமைந்துள்ள நூல் இது. இது இராமநாதபுரம் ஜில்லா செட்டிநாடு அரியக்குடிவாவியான காலஞ்சென்ற ஸ்ரீமான் சா. கி. அரங்கநாதச் செட்டியாரவர்களாலியற்றப்பெற்று அவர் குமாரர் சா. கி. ரெ. இலக்குமணச் செட்டியாரால் பிரசித்தம் செய்யப்பெற்றது. பிதாவுக்குப் புத்திரன் செய்யும் கடமை, பிதாவின் மனோரதத்தைப் பூர்ணப்படுத்தலாம். அவ்விதம் இலக்குமணச்செட்டியார் பிதாவால் எழுதப்பெற்ற இந்த ராமாயணச் சுருக்கத்தைப் பிரசித்தம் செய்ததின் மூலமாய் தம் கடமையைக் கொண்டுசெலுத்தினர். ஸ்ரீமான் அரங்கநாதச் செட்டியாரவர்கள் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளில் கல்வி கேள்விகள் நிறைந்த புத்திசாலிகளில் உயர்நலமமைந்த பத்திமான். விரிந்த படிப்பும் ஆழ்ந்த அறிவுமுள்ளவர். இச்சருக்கார்த்த சங்கிரஹத்தை வாசிப்பதினால், அவர் தெளிந்தவிஷ்ணுபக்தரென வெளியாகிறது. ஆயினும், சமயக்கொள்கையில் பொதுநோக்குடையவர். இப்புத்தகத்தின் நடை அழகாயும் எளிதாயுமிருப்பினும், இக்காலத்தில் பாடலைப்படிப்பவர்கள் வரவரக் குறுகிக்கொண்டு வருவதால், இப்புத்தகம் வசனநடையாக நிகழ்ந்திருக்குமாயின் அநேகருக்குபயோகமாயிருந்திருக்கும். அவரது புத்திரரான இலக்குமணச்செட்டியாரும் தமிழில் சிறந்த வித்வானெனத் தெரியவருவதால், பிதாவாற்செய்த புத்தகத்தை அவர்பாக்களைத்தழுவி வசன நடையாக எழுதி

அதை வெளியிடுவாராகில் அனேக ஜனங்களுக்கு உபயோகமாயிருக்கும் ஸ்ரீராமபக்தியை விளைவிப்பதற்கு அனுகூலமான நூலாயிருக்கும். இப்புத்தகத்தின் விலை அணா 8 தான்.

The Imitation of Christ in Tamil—ஏசு கிறீஸ்து என்பவர் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறை நூல். இதை தோமஸ், ஏ, கெம்பிஸ் என்ற ஞானியவர், லத்தீன் பாஷையில் ஆதியில் எழுதியுள்ளார். இது கிறீஸ்தவர்களுக்கு, மத சம்பந்தமான உயர்ந்த ஞானமுறை உபதேசிக்கும் நூல். முன்னர் 1863 ஞூத்தில், கிறீஸ்துநாதர் அனுசாரம் என்ற நாமதேயத்தின் கீழ் இப்புத்தகம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அம்மொழிபெயர்ப்பின் தமிழ்நடை தமிழ் கிறிஸ்து சமயிகளுக்கு ஒருகால் பயன்படுமேயன்றி ஏனையருக்கு ருசிக்கமாட்டாது. மேலும் அப்புத்தகம் இக்காலத்தில் அகப்படுவது துர்லபமாகத் தோன்றுகிறது; பிரகிருத மொழிபெயர்ப்பு, யாவருக்கும்புலப்படும்படி எளிய தமிழ்நடையில் நிகழ்கின்றது. மதுரை பிரஹ்மஞான சபையின் அக்கிராஸநாதிபதி ப. நாராயண அய்யரால் இந்நூதன மொழிபெயர்ப்பு ஏற்பட்டுள்ளது. இது திருச்சினாப்பள்ளி, ஸ்ரீரங்கம், ஸ்ரீவாணீவிலாஸினி அச்சுயந்திரசாலையில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது என்பதினால் இப்பிரசுரம் நேர்த்தியாக அமைந்திருக்கும் என்று யாவரும் அறியலாம். இதன் விலை 1 ரூ. தபாற்கூலி 1 அணா V. P. P. மூலம் 1 ரூ 2 அணா. இதை, மொழிபெயர்ப்பு ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அல்லது ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீவிலாஸினி அச்சுயந்திரசாலை மானேஜரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

## சடாசாரம்.

அரிசி மற்ற தான்னியங்களைவிட, தேகத்திற்கு பலத்தையும், தாதுபுஷ்டியையும் கொடுக்கிறதென்று மேனாட்டுப்பத்திரிகை "லான்ஸெட்" என்பது விஸ்தாரமான ஆராய்ச்சியுடன் சித்தாந்தப்படுத்துகிறது. மற்ற தான்னியங்களைவிட உலகத்தில் அரிசியானது பெரும்பான்மையரால் உணவாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் ஜப்பானியருக்கும் ருஷியர்களுக்கும் நடந்த போரில் அரிசியை உண்ணுகிற ஜப்பானியருடைய பலமும், வீரியமும், தைரியமும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளங்குகின்றன. ஆனால் அரிசியை ஜப்பானியர்கள் கண்ணுக்குப் பசட்டாய்த் தீட்டிச் சாப்பிடுகின்றார்களில்லை. தீட்டுவதினால் பலத்தையும், ரத்த புஷ்டியையும் கொடுக்கக்கூடிய நுண்ணியபாகவசம் தவிடாகப் பிரிகிறது. அரிசியை அதிகமாகத் தீட்டாமல் உண்ணுதலே நலம். கர்னாடகயுத்தத்தில், அதாவது

(ஆர்காட் சண்டையில்) சேகரித்து வைத்திருந்த அரிசி குறைந்துபோன பொழுது, சுதேச இராணுவஸ்தர்கள் கஞ்சியை மட்டும் சாப்பிட்டுக்கொண்டு தைரியத்தைக் கைவிடாமல் போர் புரிந்து வெற்றிகொண்டார்கள் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

---

**கொப்புரைத்தேங்காய்** 1909—1910ஹூத்தில், நம தேசத்தினின்று 79 லக்ஷ ரூ விலை பெறுமானமுள்ளவை அன்னிய தேசத்திற்கேற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. தேங்காய், நெய் முதலியவற்றிற்கு உபயோகமாகவும், உணவிற்காகவும் அது உபயோகமாகியுள்ளது. நம் தேசத்திலேயே இதை வைத்து பலதினுசான உணவுசாமான்கள் ஏன் செய்யக்கூடாது? இதைச்சரியானபடி உபயோகம் செய்ய ஒரு கூட்டுறவு கம்பெனி ஏற்படுத்தல் நலமன்றோ?

---

மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஞானக் கிளைச்சபைகளின் மூன்றாவது **கான்பரன்ஸ் ராமநாதபுரத்தில்** நாளிது ஜூலைமீ 22, 23-ம் தேதிகளில் நடைபெறும்.

---

**ராவ் பகதூர் நோரேந்திர நாத்ஸேன்:**—இவர் நாளிது ஜூலைமீ 1உ வயிற்றுப்போக்கு என்ற வியாதியால் சிரமப்பட்டு மரணமடைந்தாரெனக் கேள்விப்பட்டு விசனிக்கிறோம். இவர் கல்கத்தாவில் நடைபெறும் **இந்தியன்மிர்ரர்** ஆங்கிலப்பத்திரிகையைச் சென்ற 20 வருஷகாலமாய் மிகச் சாமர்த்தியமாகவும், நேர்மையாகவும் நடத்திவந்தார். வங்காளத்தில் உள்ள பிரஹ்மஞானசபையைச்சேர்ந்தவர்களில் இவர் தலைமையானவர், இந்தியாதேச முழுவதும் ஜனங்களாலும், இராஜாங்க உத்தியோகஸ்தர்களாலும் நன்கு மதிக்கப்பெற்றவர், நல்ல புத்திமான், உயர்ந்த சீலர், கபடமற்ற மநத்தினர். இந்திய தேச அபிமானி, நல்ல ஈசுவர பக்தியுள்ளவர் இறக்கும்போது அவருக்குவயது 68.

---

## ஒரு துக்ககரமான கொலை.

சென்றமீ 17உ பட்டப்பகலில், ஒரு பிராமணன் **மணியாச்சியில்** திருநெல்வேலி கலெக்டர் **ஸ்ரீமான் ஆஷ்** என்பாரை 1-வது வகுப்பு ரயில் வண்டியில் அவர் இருந்துகொண்டிருக்கும் காலையில் ஒரு ரிவால்வரைக் கொண்டு சுடவே அவர் உடனே மரணமானார். கொலைசெய்த கொடும் பாவி பலரால் தொடரப்படவே ஒரு ஒதுக்கிடங்கொண்டு அதே துப்பாக்கியால் தானும் சுட்டுக்கொண்டு உயிர் துறந்தான். **ஸ்ரீமாந் ஆஷ்** என்பார்

# பூர்ணசந்திரோதயம்.

திருநெல்வேலி ஜில்லாவில் நேர்மையாயும் சத்தியமாயும், ஜனங்களுக்குப் பிரீதிகரமாயும் ஆண்டுவந்தார். கொலைசெய்த இக்கொடும்பாவி தன் ஆவி நீக்கிக்கொண்டு ராஜ தண்டனையைத்தவிர்த்து யம தண்டனையையும் உடனே அனுபவிக்கப்போயிருக்கின்றான். இவனுடன் சதியோசனை செய்து இக்கொடுமையான கொலையைத் தீர்மானித்து, இப்பாபத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் இன்னும் வியக்தமாக இன்னாரென்று அறியக்கூடவில்லை. இத்தகைய பாபிகளால் தேசத்திற்கு உண்டாகிக்கொண்டுவரும் கேடு இவ்வளவென்று மதிக்க முடியாது. 'சாண் ஏற முழம் சறுக்கும்' என்ற பழமொழிக்கு ஒத்ததாக இந்தியர்களிடம் ஆங்கிலர்க்கு சமாதானமும் திருப்தியும் கொஞ்சம் ஏற்பட, திடீரென்று உயர்ந்த ஜாதியான் என்று பெயருள்ள பிராமணன் ஒருவன் கொடுமையான பாதகத் தொழிலைச் செய்யவே, கொடுமையும் குரோதமும் நம்மவர்கள்மேல் ஆங்கிலர்க்கு உண்டாவது நியாயந்தானே! தீய கருமத்தால் விளையும் துன்பமும் கெடுதியும் பெருகியவையாக ஆகுகின்றன! எறும்பை மிதிப்பதும், கொசுவை நசுக்குவதும் பாபமென்று அறிந்த பிராமணன். கொடும்பாபியாகி ஆருயிராகிய மாநிட உயிரை, அதிலும் ராஜ பிரதிநிதியாகிய நல்லாரொருவரைக் கொலை செய்த பாதகத்தை நினைக்க நினைக்க அந்தோ! மனம் நெக்கு நெக்கு என உருகி வருந்துகின்றது!

---

**ஸ்ரீமாந் எம். தில்லைநாயகம்பிள்ளை அவர்கள், B. A., F. T. S. மரணம்:**—நம்முடைய ஞானசகோதரர் எம். தில்லைநாயகம் பிள்ளையவர்கள் சென்ற ஜூன் மீ 22௳ மஞ்சட்குப்பத்தில் மரணமடைந்தாரெனக் கேள்வியுற்று வியசனிக்கிறோம். இறக்கும்போது அவர்களுக்கு வயது 73. மதுரை ஜில்லாவில் அநேக வருடங்களாக டிப்டி கலெக்டராகவிருந்து, ஜனங்களுக்கு அநேக நலமான காரியங்கள் செய்திருக்கின்றார். அவைகளில் மதுரை ரயில்வே ஸ்டேஷனை யடுத்திருக்கிற மங்கம்மாள் சத்திரம் அவருடைய விடாமுயற்சியால் ஏற்பட்டது. அவர்கள் சத்தியஸந்தர், குணசீலர். அவர்களுக்கு சிநேகிதர்கள் பெரும்பான்மையாய், பிராமணர்களுக்குள்ளேயிருக்கின்றார்கள். 'நலம்பட வாழ்'என்ற உபதேசத்தைதச்சாகும்வரையில் கொண்டு செலுத்திய புண்ணியர் இவர். சுவர்க்கலோகத்தில் சுகம்பெற்று, இன்னும் அநேக புண்ணியங்களைச் செய்ய இவ்வுலகத்திற்குச் சீக்கிரம் திரும்புவாராக.

பத்திராதிபர்.

---

# பூர்ணசந்திரோதய விளம்பரம்.

## சந்தா விவரம்.

வருஷசந்தா தபாற்கூலி உள்பட ரூ. இரண்டுதான்.
தனிப்பிரதி விலை அணா 4.

## விளம்பர விகிதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒருபக்கம் | 1 மாசம் | 4—0—0 | அரைபக்கம் | 1 மாசம் | 2—8—0 |
| ,, | 3 ,, | 10—0—0 | ,, | 3 ,, | 7—0—0 |
| ,, | 6 ,, | 20—0—0 | ,, | 6 ,, | 12—0—0 |
| ,, | 1 வரு | 36—0—0 | ,, | 1 வரு | 18—0—0 |

ப. நாராயண அய்யர்,
பத்திராதிபரும் மானேஜரும்.

## புஸ்தகப், துண்டு பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| பிராசீன தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வம்சாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| அவதாரங்களின் உண்மை | 0-8-0 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| அன்பு, அதன் உண்மை | 0-0-6 |
| சுகிர்தம்பயக்கும் வாழ்நாள்முறை | 0-0-3 |
| மடங்கள், மடாதிபதிகள் | 0-1-0 |
| நவராத்திரி அல்லது மஹிஷாஸுரமர்தநம் | 0-0-3 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மஞான சபை | 0-0-1 |
| ௸ யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| ௸ ஆங்கிலத்தில் | 0-0-3 |
| நாமிருக்கும் வீடு | 0-0-6 |
| அஷ்டமிபிரதக்ஷிணம் | 0-0-1 |
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil.) | 1-0-0 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 20 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் அடியிற்கண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ப. நாராயண அய்யர்,
பிரெஸிடெண்டு, பிரஹ்மஞான சபை, மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். | ஸ்ரீ காசி. | பட்டு பீதாம்பரா காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாததைத்திரும்பப்பெற்றுக்கொள்ளப்படும்.

## மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 முழம் 1க்கு ரூபா | 0 | 14 | 0 | 9 முழம் 1க்கு ரூபா | 2 | 0 | 0 |
| 6 டை | 1 | 4 | 0 | 10 டை | 2 | 8 | 0 |
| 7 டை | 1 | 8 | 0 | 12 டை | 3 | 8 | 0 |
| 8 டை | 1 | 12 | 0 | 15 டை | 4 | 8 | 0 |

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸூம், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, **Benares City**.